விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 25 வெள்ளிக்கிழமை (09.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202

-9 JUL 2010

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# ஐ.நா. சபை அலுவலகம் மூடல்!

# வதிவிடப் பிரதிநிதி மீள அழைப்பு

## ஐ.நா. செயலாளர் நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐ.நா. அபிவிருத்தி முகவரகத்தின் (யூ.என்.டி.பி.) பிராந்திய அலுவலகத்தை மூடுவதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் தீர்மானித்துள்ளார். அத்துடன் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நீல் பூனேவையும் ஆலோசனைகளுக்காக நியூயோர்க்கிற்கு அவர் திருப்பி அழைத்துள்ளார். நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. பேச்சாளர் நேற்றிரவு இத்தகவலை வெளியிட்டுள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இறுதி யுத்தத்தின் போது அதிகளவு மக்கள் கொல்லப்பட்டனர்

### நவநீதம்பிள்ளை உறுதியளிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது அதிகளவு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின்போது பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு பேரவையில் நடைபெற்ற விவாதத்தின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின்போது அரச படையினரும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவு பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

யுத்தத்தின்போது பொதுமக்கள் இழப்புகளை ஏற்றுக்கொள்ள முடியாது. எவ்வாறெனினும் யுத்தத்தின் பின்னர் (18ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் விமல் வீரவன்ஸ சாகும்வரை உண்ணாவிரதம்

### நேற்று மாலை ஆரம்பித்தார்

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், இலங்கை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சருமான விமல் வீரவன்ஸ சாகும் வரையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளார் என தெரியவந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூன் இலங்கையின் போர்குற்றம் தொடர்பில் அமைத்துள்ள நிபுணர் குழுவை கலைக்குமாறு கோரி கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகளின் (18ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியத் தலைவர்களுடன் தமிழ் தேசியகூட்டமைப்பு பேச்சு

(புதுடில்லி)

இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உட்பட உயர் மட்டப் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவினரே இந்தியத் தலைவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பிரதமர் மன்மோகன் சிங், வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணா, பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் ஆகியோரை சந்தித்து இவர்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உடனடியாக ஒரு அரசியல் தீர்வு (18ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு பதிலாக விஜித ஹேரத்

(கென்யா)

கென்யாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடாளுமன்றச் சங்கத்தின் மாநாட்டில் ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் ஜெனரல் சரத்பொன் சேகாவுக்கு பதிலாக கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பங்குபற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகா இம் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்காதுள்ளதன் காரணமாக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜ.தே.மு. நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். (ச-5)

## ஜனாதிபதியின் கதைவசனத்தில் பொலிஸ் மற்றும் மக்கள் நடிப்பு

### கிண்டலடிக்கிறார் அனுரகுமார திஸாநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதியினால் கதை எழுதப்பட்டு பொலிஸார் மற்றும் மக்களின் நடிப்பு உதவியுடன் மேடையேற்றப்பட்ட நாடகத்தின் பிரதான நகைசுவை நடிகர் பாத்திரத்தை விமல் வீரவன்ஸ ஏற்று நடித்து வருவதாக ஜனநாயக தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடு அலுவலகத்திற்கு எதிரில் விமல் வீரவன்ஸ ஆரம்பித்துள்ள உண்ணாவிரதம் தொடர்பான நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துவெளியிடும்போதே திஸாநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக நாட்டில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமையை ஏற்றுக்கொள்வதாகவும் எனினும் இது மிகவும் வேடிக்கையான எதிர்ப்பே தவிர உண்மையான எதிர்ப்பு நடவடிக்கை அல்ல என்பதால் அதனை முற்றாக நிராகரிப்ப (18ஆம் பக்கம் பார்க்க)

## விமல் வீரவன்ஸ போராட்டம்; இந்திய அரசாங்கம் மௌனம்!

### வை.கோபாலசாமி கவலை

(சென்னை)

ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராக அமைச்சர் விமல் வீரவன்ஸ மேற்கொண்டு வருகின்ற போராட்டத்திற்கு எதிராக இந்தியா மௌனம் காத்து வருகின்றமையை இட்டு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக பல நாடுகள் தமது எதிர்ப்பை அல்லது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள போதும் இந்தியா தொடர்ந்தும் (02ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் அறவழிப் போராட்டத்தை விமல் வீரவன்ச வலியுறுத்துகிறார்

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசியல் உரிமைகளையும், உயிர் வாழும் உரிமையையும் வேண்டி நிற்கும் தமிழ் மக்கள் செய்யவேண்டியதை ஆளுகின்ற அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் செய்வது விந்தையானது.

உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் வாழும் தமிழ் மக்கள் அறவழி சாத்வீக போராட்டங்களை மீண்டும் ஆரம்பித்திட வேண்டும் என்பதையே அமைச்சர் விமல் வீரவன்ஸவின் சாகும்வரையிலான உண்ணா விரத போராட்டம் வலியுறுத்துகின்றது என ஜனநாயகமக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிளிநொச்சியில் 2008 ற்குப் பின்னான
# பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மீண்டும் மேற்கொள்ளுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2008 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி வரை பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள் செய்யாதவர்கள் மீண்டும் அப்பதிவுகளை மேற்கொள்ள வேண்டுமென கிளிநொச்சி பிறப்பு இறப்பு மேலதிக மாவட்டப் பதிவாளர் அ.றெஜி அலோசியஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தகவல் தருகையில்,

கிளிநொச்சி மாவட்ட பிறப்பு, இறப்பு விவாகப் பதிவுகள் மற்றும் காணிப்பதிவேடுகள் என்பன போர்ச்சூழல் காரணமாக பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டு வலைஞர்மடப் பகுதியில் மாவட்டச் செயலக லொறியுடன் விடப்பட்டது.

எனினும் அதன் பின்னர் அவ்வாறு ஆவணங்களுடன் விடப்பட்ட லொறி தொடர்பான எதுவித தகவல்களும் எமக்கு அறிவிக்கப்படவில்லை.

இதன் காரணமாக பிறப்பு இறப்பு விவாகப் பதிவுகள் புதிதாக மேற்கொள்ளப் படுகின்றது. இதில் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னர் பதிவுகள் மேற்கொண்டவர்களின் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் கொழும்பு மத்திய பதிவேட்டறையிலிருந்து பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் உதவியுடன் கணனிமயப்படுத்தப்பட்டு பெற்றுக் கொண்டுள்ளோம்.

இதன் மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுச் சான்றிதழ்களுக்கு விண்ணப்பிப்பவர்களுக்கு வழங்கி வருகின்றோம். என்னும் 2008 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகள் கொழும்பு மத்திய பதிவேட்டறையில் இல்லை.

எனவே குறிப்பிட்ட காலப்பகுதியில் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொண்டவர்கள் மீண்டும் கிளிநொச்சி மாவட்ட செயலக பிறப்பு, இறப்பு மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ள வேண்டும்.

தற்போது தினமும் 350இற்கும் மேற்பட்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவு விண்ணப்பங்கள் கிடைக்கின்றன. இதனால் இப்பதிவுகளை துரிதமாக வழங்குவதற்காக் பிரதி புதன்கிழமைகளில் நடமாடும் சேவை கிளிநொச்சி மாவட்ட செயலக பிறப்பு, இறப்பு மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

கடந்த ஜுன் 29, 30 ஆம் திகதிகளில் நீதி அமைச்சும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சும் இணைந்து நடத்திய கரைச்சி பிரதேச செயலக பிரிவு மக்களுக்கான நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகளுக்கு என 9 ஆயிரத்து 250 விண்ணப்பங்கள் கிடைத்தன.

இதில் கிடைக்கப்பெற்ற 841 காலம் கடந்த பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவு விண்ணப்பங்களும் உடனடியாக பதிவுசெய்யப்பட்டு தீர்வு வழங்கப்பட்டது. ஏனைய விண்ணப்பங்களின் பதிவுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு உரியவர்களின் முகவரிக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படுகின்றது.

**ஆளணிப் பற்றாக்குறை**
**மின்சாரம் சீரில்லை**

கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு துரிதமாகத் தீர்வு வழங்குவதற்கு ஆளணிப் பற்றாக் குறை, மின்சாரம் சீரின்மை என்பன பிரச்சினையாகவுள்ளன.

ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார். என்னும் மின்சாரம் சீரின்மை காரணமாக கணனிமயப்படுத்தப்பட்டுள்ள பதிவுகளைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் நிலையுள்ளது என்றார். (ச-5)

# வலிகாமம் கல்விவலய புலமைபரிசில் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்படும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை நாளை காலை 8.30 மணிக்கு வழமையான நேரசூசிப்படி நடைபெறுமென வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கான வினாப்பத்திரங்களை இன்று பிற்பகல் 2 மணிக்கு அவ்அவ் கோட்டக் கல்விப் பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# ஆங்கில ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலய ஆங்கில ஆசிரியர்களுக்கான பரீட்சைக்கும் கணிப்பீட்டுக்குமான வழிகாட்டல் செயலமர்வு இன்று காலை 8.30 மணிக்கு வேலணை பிராந்திய கணினி நிலையத்தில் நடைபெறும்.

இச்செயலமர்வில் அனைத்து ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தீவக கல்விவலய ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கதிரேசபிள்ளை அறிவித்துள்ளார். (ச)

# மகேஸ்வரன் படுகொலைக் குற்றவாளியை கைதுசெய்ய அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை

ஐக்கியதேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான மகேஸ்வரனை படுகொலை செய்த நபர்களை கைதுசெய்யுமாறு பாரம் பரிய கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்திடம் கோரியுள்ளார். மகேஸ்வரனின் படுகொலையாளிகளை உடனடியாகக் கைதுசெய்து தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை நீக்குமாறு அமைச்சர் கோரியுள்ளார்.

அத்துடன் அண்மையில் சாவகச்சேரிப் பிரதேசத்தில் மாணவர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலும் விரிவான விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும் இந்தச் சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பிருப்பதாக சிலர் குற்றம் சுமத்தி வருவதாக அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

மகேஸ்வரன் படுகொலை சம்பவம் மற்றும் சாவகச்சேரி மாணவன் படுகொலை ஆகிய சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்னையும் எனது கட்சியையும் கடுமையாகப் பாராளுமன்றில் விமர்சித்து வருகின்றனர். எவ்வாறெனினும் இந்தப் படுகொலை சம்பவங்களிற்கும் எமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக்கைதுசெய்து விசாரணை நடத்தி என்மீது ஏற்பட்டுள்ள களங்கத்தை நீக்குமாறு அமைச்சர் அரசாங்கத்திடம் கோரியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும், அமைச்சர் மகேஸ்வரனின் பாரியாருமான விஜயகலா மகேஸ்வரன் பாராளுமன்றில் ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும் வகையில் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# விமல் வீரவன்ஸ போராட்...

மௌனம்காத்துள்ளமை வருந்தத்தக்கது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகத்துக்கு ஏற்பட்டுள்ள நிலைவிரைவில் இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிக்ரகத்துக்கும் ஏற்படலாம்.

குறிப்பாக சென்னையில் உள்ள உதவி உயர்ஸ்தானிகரகத்துக்கு இந்த நிலை ஏற்படும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 1980ஆம் ஆண்டு முதல் உலக நாடுகளில் ஏற்படுகின்ற பாரிய மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு இந்தியா எதிர்ப்பு காட்டி வந்துள்ளது. எனினும் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் எதிரான நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவு வழங்கி வந்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையினால் சூடான் மற்றும் சேர்பியா போன்ற நாடுகளுக்கு எதிராக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுக்களுக்கு எதிராக யாரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

ஆனால் இலங்கைக்கு எதிராக இவ்வாறான ஒரு குழு நியமிக்கப்பட்டமை தொடர்பில் எதிர்ப்பு காட்டுகின்றமை ஏன்? என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ச-5)

# அட்டைபிடிக்கச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி மரணம்

(யாழ்ப்பாணம்)

அட்டை பிடிப்பதற்கு கடலுக்குச் சென்ற இளைஞன் ஒருவன் நீரில் மூழ்கி நேற்று பரிதாபமாக உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் குருநகர் இரண்டாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த றோக் றொசான் (வயது 20) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

இவர் நேற்று தொழிலுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. இவரது சடலம் நேற்று மாலை யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ச-9,3)

# உதைபந்தாட்டப்போட்டி நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு

அமரர் துளசிதாசன் ஞாபகார்த்தமாக கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கான நிகழ்சிநிரல் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் பணிமனையில் நடைபெறும். இப்போட்டிக்கு விண்ணப்பித்த அனைத்துக் கழகங்களையும் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கிரிக்கெற் சுற்றின் இறுதிப் போட்டி

521 வது படைப்பிரிவினரால் வடமராட்சி விளையாட்டுக்கழகங்களுக்கும் மற்றும் இராணுவ அணிகளுக்குமிடையில் நடத்தி வந்த 10 ஓவர்கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளில் இன்று காலை 8 மணிக்கு குஞ்சர்கடை மைதானத்தில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து தும்பளை வீனஸ் அணி மோதவுள்ளதுடன் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இராணுவ இருஅணிகள் மோதவுள்ளன.

பிற்பகல் 3 மணிக்கு இறுதிப்போட்டிக்கு அரையிறுதிப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் இறுதிப்போட்டியில் மோதவுள்ளன.

இவ் இறுதிப்போட்டி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கட்டளைத் தளபதி பிரிகேடியர் லால்பெரேரா குஞ்சர்கடை 3வது சிங்கரெஜி மென்டின் கட்டளைத் தளபதி லெப்ரினன் கேணல் சம்பத் பண்டார மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொண்டு வெற்றி பெற்ற கழகங்களுக்கு வெற்றிக் கேடயங்களையும் பரிசில்களையும் வழங்கிக்கௌரவிக்கவுள்ளனர். (6-24)


**கருத்தரங்கு**

**A/L 2010**

**பொருளியல்** — **S.வரதராஜன்**

பொருளியல் - I 19ம், 20ம், 21ம் திகதிகளில்
பொருளியல் - II 23ம், 24ம், 25ம், 26ம் திகதிகளில் காலை 7.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை

- 12 புத்தகங்கள் வழங்கப்படும்
- 200 பல்தெரிவு வினாக்களுக்கு விளக்கமளிக்கப்படும்.
- வரைபடங்கள், கணக்குகள், பல்தெரிவு வினாக்கள் என்பவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- உங்கள் அனுமதிகளை 12ம் திகதி திங்கட்கிழமைக்கு முன்பாக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**பொருளியற் கல்லூரி**
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (C-615)



**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



தோற்றம்
23
02
1940

மறைவு
19
06
2009

**அமரர் நடராசா சின்னத்துரை**
(ஓய்வுபெற்ற சாலைப் பரிசோதகர், இலங்கைப் போக்குவரத்து சபை)

அன்பின் உறைவிடமே என்றும் அணையாத எங்கள் அகல் விளக்கே; நீங்கள் மறைந்து ஆண்டு பல வரினும் உங்கள் நினைவாக வாடும் உங்கள் குடும்பத்தினர் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி.

எக்கட்டியான்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

உங்கள் பிரிவில் வாடும்
குடும்பத்தினர்.

(C-612)



**முக்கிய அறிவித்தல்**

**அபிராமி எலக்றிக்கல்ஸ்**
**62/34, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எமது நிறுவனத்திற்காக வானில் கிலிப்சால் (CLIPSAL) சுவிச் வகைகள், பொஸ் பிறேக்கர் வகைகளை விற்பனை செய்து வந்த பா.அரிகரன் (கட்டுடை) என்பவரை அவ் வேலையிலிருந்து விலக்கிவிட்டோம். அவருடன் இன்று 09.07.2010 இலிருந்து எமது நிறுவனத்தின் பெயரால் வியாபாரத் தொடர்புகள் செய்ய வேண்டாமெனவும் பணம் கொடுக்கல் வாங்கல் செய்யவேண்டாம் எனவும் எமது வாடிக்கையாளர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இவ் அறிவித்தலுக்குப் பிறகு அவரிடம் கொடுக்கப்படும் பணத்திற்கு எமது நிறுவனம் பொறுப்பல்ல என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

– அபிராமி எலக்றிக்கல்ஸ்

(C-616)





# இன்று ஒரு தகவல்

## பரிவு

"இன்றைக்கு உலகத்தில் இருக்கக் கூடிய பலவகையான துன்பங்களுக்கு அடிப்படையான காரணம் என்னவென்று தெரியுமா சேர்?'' என்று கேட்டார் ஒருத்தர்.

"என்ன?'' என்று கேட்டேன்

"ஒரு மனிதன் மீது இன்னொரு மனிதனுக்கு இருக்க வேண்டிய பரிவு இல்லாமல் போய்விட்டது சேர். அதுதான் துன்பத்துக்குக் காரணம். பணத்தினால் கிடைக்காத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் மக்களுக்குக் கிடைத்து விடுகிறது'' என்றார்.

அதற்கு''டால்ஸ்டாய்'' என்ற அறிஞரின் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகச் சொன்னார்.

ஒருசமயம்.... டால்ஸ்டாய் மொஸ்கோ நகரத்தின் 24 ஆவது சாலையில் நடந்து போய்க்கொண்டிருந்தாராம். அப்பொழுது ஒரு பிச்சைக்காரன் அவருக்கு எதிரில் வந்தான்.

"ஐயா.... பிச்சை போடுங்க'' என்றான்.

டால்ஸ்டாய் இளகியமனம் படைத்தவராகையால் உடனே அந்தப் பிச்சைக் காரனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று நினைத்தார். தன்னுடைய சட்டைப் பைக்குள் கையை விட்டார். அதில் ஒரு காசு கூட இல்லை. உடனே அந்தப் பிச்சைக்காரனைப் பார்த்து,"தம்பி! கையில் பணமில்லையே" என்றார். இதைக் கேட்டதும் பசியால் வாடிப்போயிருந்த அந்தப் பிச்சைக்காரனின் முகத்தில் ஒரு மலர்ச்சி.

"ஐயா... நீங்கள் பிச்சை போடாவிட்டாலும் பரவாயில்லை. இப்ப என் மனம் நிறைந்திருக்கிறது. மகிழ்ச்சியாக இருக்கிறது'' என்றான்.

டால்ஸ்டாய் ஆச்சரியமாக அவனுடைய முகத்தைப் பார்த்தார். அவன் சொன்னான்.

''ஐயா நீங்க பிச்சை கொடுக்கிறதை விட ஒரு பெரிய உதவியை எனக்கு செய்து விட்டீர்கள். அதாவது என்னை தம்பி என்று கூப்பிட்டீங்களே.... அது போதும்! ''என்றான் அவர்.

தன்னைக் கொஞ்சமும் மதிக்காத இந்த உலகத்தில் தன்னையும் ஒரு மனிதனாக மதித்து தம்பி என்று உறவு கொண்டாடிய டால்ஸ்டாய் மீது அந்தப் பிச்சைக்காரனுக்கு அளவு கடந்த மதிப்பு ஏற்பட்டது.

கேவலம் பணத்தினால் கிட்டாத மகிழ்ச்சியும் ஊக்கமும் பரிவினால் மக்களுக்குக் கிடைத்துவிடும் என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு நல்ல உதாரணம்.

இந்தப்பரிவு மனிதனிடம் மிகவும் குறைந்து போய்விட்டது.

அதனால் தான் துன்பப்படுகிறான்.

டால்ஸ்டாய்க்கு ஏற்பட்ட பரிவுணர்ச்சி நமக்கும் கைவர வேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டும்?

தினமும் கொஞ்ச நேரமாவது நம்மைப்பற்றிய சிந்தனையிலிருந்து விடுவித்துக் கொண்டு மற்றவர்களுடைய இதயத்தில் அமர்ந்து அவர்களுடைய இதயத்தில் அமர்ந்து அவர்களுடைய கண்கள் வழியாக உலகத்தைப் பார்க்க முயற்சி செய்ய வேண்டும். பலபேர் அப்படிப் பார்த்திருக்கிறார்கள்.

அல்பேர்ட் ஷ்வைட்ஸர் அமெரிக்காவுக்குப் போயிருந்தார். அப்பொழுது அவரிடம் படித்த மாணவர் ஒருவர் அவரைச் சந்தித்தார். என்னோடு கொஞ்சம் ஹோட்டலுக்கு வர வேண்டும் என்று பணிவாக கூப்பிட்டார்.

இவரும் சரியென்று சொல்லிவிட்டு அவருடன் போனார். அங்கே அழைத்துக் கொண்டுபோய் இவரை உட்கார வைத்தார். அங்கே ஷ்வைட்ஸருக்காக ஒரு ஸ்பெஷல் கேக் வரவழைக்கப்பட்டிருந்தது. கேக்கை வெட்டுவதற்கு முன் ஷ்வைட்ஸர் அங்கே அந்த அறையில் உள்ளவர்கள் எத்தனை பேர் என்று எண்ணிப் பார்த்தார். 9 பேர் இருந்தார்கள். உடனே இவர் 10 துண்டுகள் வெட்டினார்.

9 பேர்தானே இருக்கிறோம். பத்து துண்டுகள் எதற்காக என்று எல்லோரும் யோசித்தார்கள் அப்பொழுது அல்பேர்ட் ஷ்வைட்ஸர் கூறினார்; ''ரொம்பப்பிரியமாக இந்தக் கேக்கை இங்கே கொண்டுவந்து வைத்த பணிப்பெண்ணுக்கு இந்த பத்தாவது துண்டு ''என்றார்.

இது தான் பரிவு மனிதன் மனிதனுக்கு காட்டவேண்டிய பரிவு.

இப்பொழுதெல்லாம் ஒருமனிதன் இன்னொரு மனிதனை எப்படி எடைபோடுகிறான் தெரியுமா?

ஒரு ரயில் நிலையத்தில் ஒருத்தர் நின்று கொண்டிருந்தார். அங்கு ஒரு ஆள் வந்தான்.

''சேர்.... உங்களுக்கு மதுப்பழக்கம் உண்டா?'' என்று கேட்டான். "சுத்தமா கிடையாது சேர்'' என்றார் அவர்.

''அப்படியானால் இந்த மதுப் போத்தலை கொஞ்ச நேரம் வைத்திருங்கள். நான்போய் ரிக்கெற் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று அதைக் கொடுத்துவிட்டு மிகவும் நம்பிக்கையோடு நடந்து போகிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# க.பொ.த.(சா/த) கணித பாட பரீட்சையில் சித்தியடையாதோரும் உயர்தரம் கற்க வாய்ப்பு

## கல்வியமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

க.பொ.த.(சா/த) பரீட்சையில் கணிதபுாடத்தில் சித்தியடையாது உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்க கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 49 சதவீதமானவர்கள் கணிதபாடத்தில் சித்தியடைவது இல்லை எனவும் இதன் காரணமாக நடனம், சித்திரம் உள்ளிட்ட கலைப்பாடங்களுக்கு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் வாய்ப்பையும் மாணவர்கள் இழந்து விடுகிறார்கள் என்றும் குறிப்பிடப் படுகிறது.

எனினும் பௌத்த கலாசாரம் போன்ற பாடங்களில் தோற்ற கணித அறிவு அவசியம் இல்லாததால் இவ்வாறானதொரு வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்க தீர்மானித்ததாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந்த நடைமுறை தொடர்பாக கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள் ஆகியோருடன் கலந்துரையாடி இந்தச் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (6-4)

## ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

வடமராட்சி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள ஆரம்பக்கல்வி, ஆங்கிலம், சுகாதாரமும் உடற்கல்வியும், விஞ்ஞானம், மனைப்பொருளியல், இரண்டாம்மொழி சிங்களம், விவசாயம், சித்திரம், சங்கீதம், நடனம், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட வலய ஆசிரியர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன.


உரிய தகைமைகளையுடைய ஆசிரியர்கள் தங்களது விண்ணப்பங்களை யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளரிடம் சமர்ப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். மேலும் சித்திரம், சங்கீதம், நடனம், கிறிஸ்தவம் ஆகிய பாடங்களுக்கு வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6)

## மின்தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் நடைபெற விருப்பதால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை மற்றும் தென்மராட்சி பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்படுமென இலங்கை மின்சாரசபையின் சுன்னாகம் மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

அத்துடன் பருத்தித்துறை பிரதான வீதி அகலமாக்கும் பணிகளுக்காக மின்சார விநியோக தூண்களை இடமாற்றம் செய்ய விருப்பதால் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 7 மணிவரை புன்னாலைக்கட்டுவான், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு மற்றும் வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின் விநியோகம் தடைப்படும் எனவும் நாளை சனிக்கிழமை மின்வெட்டு அமுல்படுத்தப்படாது எனவும் அவ் அலுவலகம் மேலும் அறிவித்துள்ளது. (6)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான உயரம் பாய்தல் 13 வயதுப் பிரிவில் வவுனியா பூம்புகார் கண்ணகி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவன் செல்வன் எஸ். கேதீஸ்வரன் 1.38 மீற்றர் பாய்ந்து புதிய சாதனையொன்றை நிலை நாட்டியுள்ளார்.

குறித்த மாணவனுடன் அவரைப் பயிற்றுவித்த ஆசிரியர்களான நா. சதீஸ்வரன் , ஸ்ரீ.ஸ்ரீபவான் ஆகியோரை படத்தில் காணலாம். (படம்: என்.குமார்)

## இராசி பலன்

09.07.2010
(ஆனி25, வெள்ளிக்கிழமை)
துவாதசி காலை 6.19 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.11 மணிவரை
ரோகிணி மாலை 6.31 மணிவரை
இராகுகாலம் 10.28-11.58 மணிவரை
சுபநேரம் 5.58-7.28 மணிவரை
சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர் கொடி,
பிரதோச விரதம்

| | |
|---|---|
| மேடம் | குடும்பக் கவலை, தெய்வதரிசனம், அதிக பிரயாணம்,போசன சுகம். |
| இடபம் | தெய்வசிந்தை, நண்பர்கள் சந்திப்பு, வெகுமானம், சயன சுகம். |
| மிதுனம் | கோபப்படுதல்,சுபசெலவு,காரிய தாமதம், தெய்வசிந்தை. |
| கடகம் | உறவினர்வருகை, போசன சுகம், தெய்வதரிசனம், முயற்சி கைகூடும். |
| சிங்கம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுபநிகழ்வு,அதிகாரம்,தேவநலன். |
| கன்னி | சரீரப் பிரயாசை,புதிய திட்டமிடல், தந்தைவழிஉறவு,வீண் பயம். |
| துலாம் | எதிரிகள் தொல்லை,போசன சுகம், முயற்சிதாமதம், பிரயாண பயம். |
| விருச்சிகம் | உறவினர்வருகை, தெய்வ சிந்தை,காரியநன்மை,பொருள் சேர்க்கை. |
| தனுசு | தொழில் நன்மை,திடீர்பயணம், முயற்சிகைகூடும், விருந்துபசாரம். |
| மகரம் | வியாபாரநன்மை, கௌரவக் குறைவு, பணவிரயம், காரியதாமதம். |
| கும்பம் | பயந்தசுபாவம்கல்வியில் ஆக்கம், ஆரோக்கியக் குறைவு,உறவினர் சந்திப்பு. |
| மீனம் | இனிய சம்பவம், வாக்கு மேன்மை, முயற்சிகைகூடும், தனவருவாய். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 140 |
| தக்காளி | 70 | 70 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 70 | 70 | 70 |
| கரட் | 130 | 120 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 60 |
| பாகற்காய் | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 70 |
| பயற்றங்காய் | 80 | 70 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 60 | 100 | 60 |
| கறிமிளகாய் | 120 | 120 | 110 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 120 |
| போஞ்சி | 100 | 120 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 40 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 80 | 100 | 110 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 25 | 25 |



யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவும், அருணாசலம் மலர் வெளியீட்டு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், உரையாற்றுவதையும் மேடையில் யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை தலை வர் பேராசிரியர் மா.சின்னத்தம்பி,தென்னிந்திய திருச்சபை குருமுதல்வர் ம.யூட்சுதர்சன் மற்றும் அதிபர் கு.ஜெகநாதன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், வலிகாம வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வாழ்த்துரை வழங்குவதையும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு மலர் ஆய்வினை நிகழ்த்து வதையும் துணைவேந்தரால் வெளியிடப்படும் நூலை தெல்லிப்பளை கோட்டக்கல்வி பணிப்பாளரும் இப் பாடசாலையின் அதிபருமாகிய ச. கைலாசநாதன் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

# புனர் வாழ்வு நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சில் இருந்து கௌரவ அமைச்சர் பிரதி அமைச்சர் மற்றும் அமைச் சுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்டத்திற்கு நாளை சனிக்கிழமை வருகை தரவுள்ளதுடன் அன்றைய தினம் புனர்வாழ்வு நடமாடும் சேவையினையும் நடத்தவுள்ளனர்.

இந் நடமாடும் சேவை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை புனர்வாழ்வு நிலை யத்தில் நடைபெறவுள்ளதுடன் இதில் ஆட்க ளையும் ஆதனங்களையும் கைத்தொழில் களையும் புனரமைப்புச் செய்யும் அதிகார சபையின் உத்தியோகத்தர்களும் வருகை தரவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

ஆகவே வன்செயல் இழப்புக்களினால் பாதிக்கப்பட்டவர்களும் இந் நடமாடும் சேவையில் பங்குகொண்டு தங்களது பிரச் சினைகளுக்கான தீர்வினை பெற்றுக்கொள் ளக் கூடிய சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசாங்க அதி பர் க.கணேஷ் அறிவித்துள்ளார். (6-4)

## கார்மேல் அன்னை ஆலயத்திருவிழா

(குருநகர்)

குருநகர் கார்மேல் அன்னை ஆலயத் திரு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பங்குத்தந்தை ஆர்.ஏச். சகாயநாய கத்தினால் ஆலயக் கொடி ஏற்றி வைக்கப்பட வுள்ளது.

இதில் நவநாள் தொடர்ந்து 7 நாட்கள் தினமும் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று எதிர்வரும் 16ஆம் திகதி காலை 6.30 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளதுடன் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையும் திருச்சுரூப பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளது. (4-39)

## மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பூநகரி வேரவில் திருவருள் மிகு வெள் ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் தேவஸ் தான மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம் பப் பூஜைகள் நடைபெற்று மறுநாள் வியாழக் கிழமை காலை 7 மணிக்கு விசேட பூஜைகள் இடம்பெற்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பக்கதர்கள் எண்ணெய்க் காப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (6-4)

## புல்லாங்குழல் இன்னிசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருஞான சம்பந்த ஆதீன குரு மூர்த்தி ஆலய மண்டபத்தில் இன்று வெள் ளிக்கிழமை பிற்பகல் 5.00 மணி முதல் நல்லை ஆதீன குரு மகாசந்நிதானம் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்தர் பரமாசார்ய சுவாமிகளின் அருள் ஆசியுரையுடன் நோர்வே சகோதரிகளான செல்வி மீரா திருச்செல்வம், செல்வி தீபா திருசெல்வம் ஆகியோரின் புல் லாங்குழல் இன்னிசைக் கச்சேரி நடைபெற உள்ளது. (6-4)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் தேவஸ் தான மணவாளக் கோல அலங்கார உற்ச வம் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் தினமும் மாலை 3 மணிக்கு ஸ்நபன அபிஷேகமும் மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப பூசையும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு சங்காபிஷேகமும் இரத பவனியும் நடைபெறவுள்ளது. (6-4)

## கர்ப்பூரத் திருவிழா

(பருத்தித்துறை)

அல்வாய் வேலி லந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் 5ஆம் நாள் உற்சவமான கர்ப்பூரத்திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வருடா வருட நிகழ்வுகள் போல இவ்வரு டமும் பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர். அன் றைய திருவிழா நிகழ்வின் போது பக்தி பூர் வமான பல்வேறு நிகழ்வுகளும் நடை பெறவுள்ளது. (6-10)

## வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் சேவைகள்

(பருத்தித்துறை)

வடமாராட்சி லயன்ஸ் கழகம் பார்வை இழந்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடியும் கால் இழந்தவர்களுக்கு இரு சக்கர தள்ளு வண்டிகளையும் இலவசமாக வழங்கியுள் ளனர்.

கடந்த 4ஆம் திகதி நெல்லியடி முருகன் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்ற லயன்ஸ் கழக உறுப்பினருக்கான முக்கிய நிகழ்வு ஒன்றின் போது மூக்குக் கண்ணாடி யும் இரு சக்கர தள்ளுவண்டியும் இவர்க ளுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் இரண்டாவது துணை மாவட்ட ஆளுநர் லயன்ஸ் எஸ்.எஸ். தங்க ராஜா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார். அன்றைய தினம் 8 பேர் புதிய லயன்ஸ் உறுப்பினர்களாக இணைந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (6-10)

# கிராமசேவகர் அலுவலகங்களில் வாக்காளர் மீள்பதிவுகள்

(கொழும்புத்துறை)

வாக்காளர் மீள் பதிவு VC 12 படிவங்கள் கொழும்புத்துறை பகுதிகளுக்கு கிராமசேவ கரால் வழங்கப்பட்டு வருகிறது.

வாக்காளர் இடாப்பில் உள்ள பெயர்களை சேர்த்துக் கொள்ளும் முகமாக, படிவம் கிடைக் காதவர்கள் கிராம சேவகர் ஊடாக ஜீலை 31 ஆம் திகதிக்கு முன்னர் படிவங் களை பூர்த்தி செய்து, கிராமசேவகரிடம் கையளித்து அதற் கான பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளு மாறும், தவறுவோரின் பெயர்கள் பெயர் பட் டியலில் இருந்து நீக்கப்படுவதுடன் வழங்கப் படும் நன்மைகளும் இழக்க வேண்டி வரு மென தேர்தல் தொடர்பான அமைப்புகள் சுட் டிக்காட்டுகின்றது.

அத்துடன் கடந்த வருடங்களில் வாக்கா ளர் இடாப்பில் பதிவு செய்திருந்தாலும் இம் முறை கட்டாயமாக வாக்காளர்கள் மீள் பதிவு செய்ய வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. (6-51)

## குடாநாட்டின் இன்றைய வானிலை

(யாழ்ப்பாணம்)

இன்று பகல் வேளையில் அல்லது மாலை யில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என திரு நெல்வேலி வானிலை அவதானிப்பு நிலை யம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்றைய தினம் வட மராட்சி ,தென்மராட்சி பிரதேசங்களில் ஆங் காங்கே மழை பெய்ததாக தெரிவிக்கப் படுகிறது. (6)

## கருத்தமர்வுகள்

(கொழும்புத்துறை)

யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளுக்கு ஆரம்ப கால பிள்ளைப் பருவ வளர்ச்சி, விருத்தி பாதுகாப்பு தொடர் பான கருத்தமர்வுகள் அவ்வவ் முன்பள்ளி பெற்றோர்களுக்கு யாழ்.மாநகர சபையின், சுகாதார கல்வி அதிகாரியினால், நடாத்தப் பட்டு வருகிறது.

நேற்று காலை 11.30 மணிக்கு மாநக ரசபை முன்பள்ளி மண்டபத்தில் பெற்றோர் கள் பலர் கருத்தமர்வில் கலந்துகொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (6-51)




## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக் கிழமை காலை 8 மணிக்கு கல்லூரியின் கிறிஸ்தவ மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந.தெய்வேந்திரராஜா தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிமனையின் பாடசாலை வேலைப்பகுதி பொறியியலாளர் கு.சிவபாலன் கலந்து சிறப்பிப்பதுடன் மாண வர்களுக்கான பரிசில்களை திருமதி வசந்தி மாலா சிவபாலன் வழங்கி கௌரவிக்க வுள்ளார். (4-19)

## வருடாந்த நவநாள் வழிபாடுகள்

(கொழும்புத்துறை)

நல்லூர் ஆசீர்வாதப்பர் ஆலய வரு டாந்த நவநாள் வழிபாடுகள் கடந்த 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடை பெற்றுவருகிறது.

நாளை பிற்பகல் 5 மணிக்கு நற்கருணை திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு செபமாலையுடன் திரு விழா திருப்பலி ஆரம்பமாகுமென மேற்படி ஆல யப் பங்குத்தந்தை அறிவித்துள்ளார். (6-51)

## சப்பறத் திருவிழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சங்கத்தானை கந்தசுவாமி வைரவ சுவாமி ஆலய சப்பறத்திருவிழா இன்று மாலை 7 மணிக்கு விசேட தவில் கச்சேரி யுடன் நடைபெறவுள்ளது.

இதில் தென் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள தவில் வித்துவான் கே. ஜி. கல் யாண சுந்தரம் மற்றும் சித்தார்த்தன் பி. எஸ்.பாலமுருகன் குழுவினரின் விசேட நாத ஸ்வர கச்சேரியும் இடம்பெறவுள்ளது.(6-29)

## ஆசிரிய ஆலோசகர் வெற்றிடம் நிரப்புதல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்வி, தமிழ்,சமூகக்கல்வி வரலாறு ,சித்திரம், நடனம்,கிறிஸ்தவம்,இந்து சமயம்,வர்த்தகம், இரண்டாம் மொழி -சிங்களம் ,முறைசாராக் கல்வி,உடற்கல்வி,விசேட கல்வி ஆகிய பாடங் களுக்கான ஆசிரிய ஆலோசகர் பதவி வெற் றிடங்கள் உள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்க விரும்பும் இலங்கை ஆசிரிய சேவை I,II இனைச் சேர்ந்த யாழ். மாவட்ட ஆசிரியர்கள் இதற் கான விண் ணப்பங்களை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் மேலதிக மாகாணக்கல் விப்புணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வே. தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (6-4)

# குப்பைகள் கொட்டப்படுவதால் வீதியால் செல்லமுடியாத நிலைமை

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு அரு காமையிலுள்ள சிவகுருநாதன் ஒழுங்கை யில் கோழிகளின் கழிவுகள் மற்றும் குப்பை கள் கொட்டப்படுவதால் அவ் ஒழுங்கையூடாக பயணஞ்செய்யும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக் குவதாக குறிப்பிடப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் சுகாதார சீர் கேடு கள் ஏற்படுவதாவும் நோய்கள் பரவும் அபா யம் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மாணவர்கள் மற்றும் பொது ம்க்களின் நலன்கருதி உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் ளுமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின் றனர். (6-4)

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வாக்காளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை

# உதவித் தேர்தல் ஆணையாளர் தகவல்

(கிளிநொச்சி)

வடபகுதியின் கிளிநொச்சி ,முல்லைத்தீவு மாவட்டங்களில் வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன.

வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான படிவங்கள் அந்தந்த மாவட்ட பிரதேச செயலகங்களால் கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக வீட்டுக்கு வீடு விநியோகிக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கப்படுவதாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான உதவித் தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ்.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி,முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட அசாதாரணமான நிலைமை காரணமாக இப்பகுதியில் வாக்காளர் பதிவு நடைபெறவில்லை. தற்போது வீடுகளுக்கு படிவங்கள் வழங்கப்பட்டு வாக்காளர்களைப் பதிவு எடுக்கும் நடைமுறை நடைபெறுகிறது.

இந்நடவடிக்கைகள் ஏனைய மாவட்டங்களில் வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் இங்கு நடைபெறமாட்டாது.

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து இந் நடவடிக்கை அமுல்படுத்தப்படுகிறது. இதனை மேற்கொள்வதற்காக கிளிநொச்சி கச்சேரியில் தேர்தல் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடமையாற்றும் கிராமசேவையாளர்களுக்கு இது தொடர்பான பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வாக்காளர் பதிவுப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவுகள் இருந்த போதும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் மீளக் குடியேற்றம் இன்னும் நடைபெறாதபடியால்,ஏனைய 4 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமசேவையாளர்களுக்கு பயிற்சி வகுப்புகள் மேற்கொள்ளப்பட்டு, வாக்காளர் பதிவுப்படிவங்களும் வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் யூலை 31ஆம் திகதியுடன் முடிவடையும் வாக்காளர் பதிவானது கிளிநொச்சி ,முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக் குடியமர்வுகளைப் பதிவதற்கு வசதியாக மேலும் 2 மாதங்களுக்கு கால நீடிப்பு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எம்மால் வழங்கப்பட்டுள்ளது.

இக்கால முடிவில் கிராம சேவையாளரிடம் இருந்து பதிவு செய்யப்பட்ட படிவங்கள் மீளப் பெறப்படுவதுடன் ,இக்கால முடிவின் பின்பு மீளக் குடியமர்வு நடைபெறாத பிரிவுகள் தொடர்பாகவும் மீளக் குடியமர்த்தப்படாது தற்போது முகாம்களில் தொடர்ந்து வசிப்பவர்கள் தொடர்பாகவும் எம்மால் தேர்தல் ஆணையாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

நீண்டகாலம் பதிவு இல்லாதவர்கள் பதியாமல் இருந்தால் அவர்களையும் சேர்த்து பதிவதற்குரிய நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணம் ,வவுனியா மாவட்டங்களில் பதிவுள்ளவர்கள் கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்து இம் மாவட்டங்களுக்கு தங்கள் பதிவுகளை மாற்ற விரும்பினால் தங்கள் வாக்காளர் பதிவில் உள்ள கிராமசேவையாளரிடம் இருந்து பதிவுகளைப் பெற்றோ அல்லது எம்மால் வழங்கப்படும் படிவ இல. 3 என்ற படிவத்தை பூரணப்படுத்தி கிராம சேவையாளரிடம் ஒப்படைப்பதன் மூலம் தங்கள் பதிவுகளை கிளிநொச்சி ,முல்லைத்தீவு மாவட்டங்களுக் கு மாற்றிக்கொள்ள முடியும். அதேபோல் கிளிநொச்சி ,முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவுள்ளவர்கள் வேறு மாவட்டங்களில் குடியேறியிருந்தால் மேற்கூறிய நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

ஒரு குடும்பம் மீளக்குடியமர்ந்திருந்து அந்த குடும்ப அங்கத்தவர் ஒருவர் அல்லது இருவர் தொழில் நிமித்தம் அல்லது கல்வி நிமித்தம் வேறு மாவட்டங்களிலோ அல்லது வெளிநாட்டிலோ தற்காலிகமாக வசிக்கும் இடத்து அவர்களையும் பதிவதற்கான நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்படுகிறது.

குடும்பமாக மீளக் குடியமராது வெளி மாவட்டங்களில் வசிப்பவர்களினதும், வெளிநாடு சென்றவர்களினதும் பதிவுகள் எம்மால் நீக்கப்படவிருக்கிறது.

அது தவிர,பதியப்படாதவர்கள் அல்லது பதிவு நீக்கப்பட்டவர்கள் ஜனவரி மாதம் அளவில் தேர்தல் ஆணையாளரால் அறிவிக்கப்படும் திகதிக்குள் உரிய படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி ஒப்படைப்பதன் மூலம் உரிய விசாரணையில் அவர்கள் பதியத் தகுதி பெற்றிருந்தால் அவர்களையும் பதிவதற்குரிய நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். (6)

# இணுவைக் கந்தனுக்கு நாளை தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் இருபத்து மூன்றாம் நாளான இன்று வேட்டைத்திருவிழாவும் நாளைய தினம் தேர்திருவிழாவும நடைபெறவுள்ளது.

இன்று காலை விசேட அபிசேஷ ஆராதனை இடம்பெற்று முறபகல் 10 மணிக்கு வேட்டைத்திருவிழா நடைபெறும். ஆலயத்திலிருந்து சண்முகப்பெருமானும் வள்ளியும் இணுவில் சிவகாமி அம்பாள் ஆலயத்தை அடைந்து அங்கிருந்து 1 மணியளவில் மீண்டும் ஆலயத்தை வந்தடைவார்கள். மாலை 6மணிக்கு வசந்த மண்டபபூசை நடைபெற்று இரவு 7.30 மணிக்கு சப்பரத் திருவிழா நடைபெறும்.

நாளை சனிக்கிழமை அதிகாலை பூசை நடைபெற்று 8 மணிக்கு வசந்தமண்டபபூசை நடைபெற்று காலை 10.30 மணிக்கு ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வானை சகிதம் தேரில் ஆரோகணிக்கும் காட்சி இடம்பெறும். மாலை 4 மணிக்கு மடாலய ஆராதனையும், திருவூஞ்சலும் இடம்பெறும். மறுதினம் மாலை 4 மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம் பெறவுள்ளது. (6)

# இறுதிப்பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாக் கற்கை நெறியினைத் தொடரும் மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள் நாளை முதல் நடைபெறவுள்ளன.

காலை, மாலை என இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள இப்பரீட்சைகளில் நாளை சனிக்கிழமை கல்வி உளவியல், கல்வி வழிகாட்டல் ஆகிய பாடங்களும் நாளை மறு தினம் ஞாயிற்றுக்கிழமை கல்வித்தொழில்நுட்பம், கல்வியின் அடிப்படைகள் ஆகிய பாடங்களும் நடைபெறும்.

17 ஆம் திகதி சனிக்கிழமை அளவீடும் மதிப்பீடும் மற்றும் சிறுவர் உரிமைகள்/ ஆரம்பக்கல்வி /உள்ளடங்கல் கல்வி என்பவும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒப்பீட்டுக்கல்வி மற்றும் கலைத்திட்டம் / கல்வித் தொழில்நுட்பம் ஆகிய பாடங்களும் நடைபெறும் என இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்.பிராந்திய இணைப்பாளர் கேட்டுக் கொள்கின்றார். (6)

# மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரி பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கம்

(கொழும்பு)

மீள்குடியேற்ற அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவின் மகனின் திருமண நிகழ்வில் மீள்குடியேற்ற அமைச்சரும் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயக மூர்த்தி முரளிதரனும் நடனமாடிய காட்சி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிய சம்பவம் குறித்து மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரி ஒருவர் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சின் ஊடக இணைப்பு அதிகாரியான ஸ்டான்லி பதிராஜ என்பவரே பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டவராவார்.

இதேவேளை மீள்குடியேற்ற அமைச்சரதும் பிரதியமைச்சரதும் நடனம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரிடம் கேள்வி எழுப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (6)

# பரிசளிப்பு விழாவில் கௌரவம் பெறும் வித்தியாலய மாணவர்கள்


ந.விஜிதரன்


ம.யசோதா


பி.யூடிற்றா


ர.துன்சியா


க.சியானி


யா.யூட்லாஸ்


கு.குலசீலன்

(யாழ்ப்பாணம்)

யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் அதிபர்கே.கனகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இவ் வருடம் சாதனைகளை நிலை நாட்டிய மாணவர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய க.பொ.த உயர்தர பரீட்சையில் 3ஏ பெற்ற மாணவர்களான ந.விஜிதரன், ம.யசோதா,பி.யூடிற்றா, ர.துன்சியா ஆகியோரும் மாகாணமட்ட தடகளப் போட்டியில் பதக்கம் பெற்றவர்களான க.சியானி (தட்டு,முப்பாய்ச்சலில் முதலாமிடம்) ஞா.யூட்லாஸ்(100மீ, 400மீஓட்டம் மூன்றாமிடம்),கு.குலசீலன் (தடைதாண்டலில் மூன்றாமிடம்) ஆகிய மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (6)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் மணியந்தோட்ட பகுதி மக்கள்

(கொழும்புத்துறை)

மணியந்தோட்டப்பகுதி மக்கள் பல வசதி குறைபாடுகளுடன் மீளக் குடியேறி வருகின்றனர்.

இம் மக்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதால், வாடகை வீடுகளில் இருந்த இம் மக்களை வீட்டு உரிமையாளர்கள் வெளியேற்றி வருகின்றனர்.

தற்காலிக ஏற்பாடுகளுடன் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் 15 குடும்பங்கள் தற்போது குடியேறி இருக்கின்றனர்.

மணியந்தோட்டப்பகுதியானது யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்து மக்கள் சென்று வர அனுமதிக்கப்படவில்லை. தற்போது செல்ல அனுமதி கிடைத்தும் மக்கள் இயல்பு வாழ்க்கையைத் தொடர்வதற்கு சிரமப்படுகின்றார்கள். (6-51)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 05 ✸ 06 ✸ 1965



இறப்பு 09 ✸ 07 ✸ 2009

அமரர்

பொஸ்கோ சூசைப்பிள்ளை றெனிபேட் அரியதாஸ்

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்

அமரர் பொஸ்கோ அவர்களின் ஓராண்டு நினைவு தினம்

இன்று (09.07.2010) வெள்ளிக்கிழமை பொலிகண்டி அற்புதக் குழந்தை இயேசு தேவாலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றி திருப்பலி பகல் 11.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். இவ் ஆன்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்பர்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குழந்தை இயேசு கோவிலடி, பொலிகண்டி.

மனைவி தங்கமலர், பிள்ளைகள், மருமக்கள்.

(1811)

# வேறு நாடுகளின் தேவைக்கேற்ப செயற்படுவது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்

## பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க

(கொழும்பு)

வேறு நாடுகளின் தேவைக்கேற்ப இலங்கையின் மனித உரிமைகள் மேம்படுத்துதற்கான நிபந்தனைக்கு உட்படமுடியாது எனவும் அது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையுமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் பாதுகாப்புக்கான அமைப்பு கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

அங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவ விஜேசிங்க, ஐரோப்பிய ஒன்றியம் கலந்துரையாடாமல் நிபந்தனைகளை விதிப்பதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான நிலையைச் சற்றுமேம்படுத்த வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்வதாகவும் ஏனைய நாடுகள் கூறுகின்றன என்பதற்காக மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான நிபந்தனைகளுக்கு உடன்ட முடியாததெனவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு உடன்பட்டால் அது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையுமென அவர் மேலும் குறிப்பிட்டார். (6-4)

# வலயமட்டப் போட்டிகள்

(அல்வாய்)

வடமராட்சி வலய மட்ட பன்மைத்துவ கலாசாரம் ஊடாக சமாதானம் என்னும் தலைப்பில் சித்திர, கவிதைப் போட்டிகள் இன்று காலை 10 மணிக்கு புலோலி மெ.மி.த.க. பாடசாலையில் நடைபெறும்.

மாணவர்கள் போட்டிக்கு வரும் போது சித்திரம் வரையும் தாள், வர்ணச் சோக்பெட்டிகள் , கலர்பென்சில்கள் ஆகியவற்றுடனும் கவிதை எழுதுவோர் காகிதாதிகளுடனும் சமூகமளிக்குமாறு வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி சி.புஸ்பலிங்கம் அறிவித்துள்ளார். (6-19)

# அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள் இருவரை நாட்டிலிருந்து வெளியேற்ற உத்தரவு

(கொழும்பு)

இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர் மற்றும் தலைவர் ஒருவரை நாட்டில் இருந்து வெளியேறுமாறு நேற்று முன்தினம் அறிவித்துள்ளதாக குடிவரவு-குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

புலனாய்வுப் பிரிவுகளின் அறிக்கைகளை கவனத்தில் கொண்டு அவர்களின் விசா அனுமதியை இரத்துச் செய்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அகிம்சைவாத சமாதான படையணியின் இலங்கை கிளையின் பணிப்பாளர் டிபானி ரிஷ்னம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அலிபால் ஆகியோரின் விசா அனுமதிகளே இரத்துச் செய்யப்பட்டுள்ளன எனவும்டிபானி நேற்று முன்தினம் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளதாகவும் விமான நிலையத் தகவல் கள் தெரிவிக்கின்றன. (6-4)

# பொலிஸ் பதிவை மேற்கொள்ளுமாறு வெள்ளவத்தை மக்களுக்கு அறிவிப்பு?

(கொழும்பு)

வெள்ளவத்தைப் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மீண்டும் தங்களைப் பொலிஸில் பதிவு செய்ய வேண்டும் என அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் முச்சக்கரவண்டி மற்றும் பொலிஸ் வாகனங்களில் ஒலிபெருக்கிகளை பொருத்திக் கொண்டு பொலிஸார் இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலிடத்தின் பணிப்புரையின் பேரிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அதனால் வெள்ளவத்தை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அனைவரும் கட்டாயமாக பொலிஸில் தம்மை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நாட்டின் சுமூகமான நிலை காரணமாக வெளிநாட்டில் இருந்தும் பெருமளவிலானோர் வந்து விடுதிகள் மற்றும் உறவினர் வீடுகளில் தங்கியிருப்பதாகவும் இவர்கள் தொடர்பான பதிவுகள் எதுவும் இல்லை எனவும் கூறும் பொலிஸார் அனைவரும் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்திருக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

இதேவேளை வெள்ளவத்தைப் பகுதியில் மீண்டும் பொலிஸ் பதிவை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ள இந்த அறிவித்தல் வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள மக்களுக்கு மாத்திரமா அல்லது ஏனைய பகுதிகளுக்கு பொருந்துமா? என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாந்த ஜெயக்கொடியுடன் வினவிய போது ,மீண்டும் பொலிஸில் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற அறிவித்தல் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது எனவும் அது தொடர்பாக ஆராய வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு நாட்டில் அமைதி நிலை உருவாகியதைத் தொடர்ந்து கடந்த காலத்தில் இருந்து வந்த பொலிஸ் பதிவு முறைகள் முற்றாக நீக்கப் பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே வெள்ளவத்தைப் பகுதியில் மீண்டும் பொலிஸ் பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் திணைக்களத்தில் இருந்தோ அல்லது பாதுகாப்பு அமைச்சில் இருந்தோ இதுவரையிலும் பொதுவான அறிவித்தல் ஒன்றும் விடுக்கப் படவில்லை என்பதுடன் வேறு எந்த பொலிஸ் பிரிவிலும் இவ்வாறு பொதுமக்கள் மீண்டும் பொலிஸில் பதிவு செய்ய வேண்டும் என அறிவிக்கப்படவில்லை என்பதும் கவனிக்கத் தக்கதாகும். (6)

# ஆளும் கட்சியில் இணைவதற்கு ஐ.தே.க. முக்கியஸ்தர்கள் தீர்மானம்?

(கொழும்பு)

எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர் ஒருவரும்,ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் ஆளும் கட்சியில் இணையத் தீர்மானித்துள்ளனர் எனவும் அரசாங்கத்தில் இணைவது குறித்த பேச்சுவார்த்தைகளை பிரபல அமைச்சர் ஒருவர் மேற்கொண்டு வருவதாகவும் திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த கட்சித் தலைவரை அரசாங்கத்தில் இணைக்கும் முயற்சிகளை ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரே மேற்கொண்டுவருவதாகவும் இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

குறித்த இருவரும் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கி வருவதாகவும் இந்த பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்காக ஆளும் கட்சியில் இணையத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (6-4)

# வரிச்சலுகை நிறுத்தத்தால் இலங்கை 1560 மில்.டொலர்களை இழந்துள்ளது

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு வழங்கி வந்த வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் எதிர்வரும் மாதம் நிறுத்தவுள்ளதால் இலங்கை அரசு 1.56 பில்லியன் டொலர்களை (1560) மில்லியன்



டொலர்களை இழந்துள்ளதாக த.நியூயோர்க் ரைம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது,

மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு தவறியதால் ஐரோப்பிய ஒன்றியம் அதன் ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்த வரிச்சலுகையை நிறுத்தியுள்ளது.

இதனால் வருடத்திற்கு 1.24 பில்லியன் யூரோக்களை அல்லது 1.56 பில்லியன் டொலர்களை இலங்கை இழந்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிவிப்பால் இலங்கையின் புடவை மற்றும் .மீன் பிடிகைத்தொழில்கள் அதிக பாதிப்பை சந்திக்கலாம் என அது மேலும் தெரிவித்துள்ளது. (6)

# யுத்தம் காரணமாக 500இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிவடைந்துள்ளன

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பி. தெரிவிப்பு

இலங்கையில் நடைபெற்ற போரில் 500 இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிவடைந்துள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.யோகராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் நடைபெற்ற போரில் 500இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிவடைந்துள்ளன. இந்த ஆலயங்கள் புனரமைக்கப்படவேண்டும்.

வடக்கு -கிழக்கில் நடைபெற்ற படை நடவடிக்கையினாலேயே அதிக ஆலயங்கள் அழிவடைந்துள்ளன. இலங்கையில் ஆயிரத்து 543 பாடசாலைகளும் உள்ளன. அவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அரசு ஊதியங்களை வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-4)

# இலங்கை விவசாயிகளுக்கு இஸ்ரேலில் தொழில்வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கை விவசாயிகளுக்கு இஸ்ரேலில் தொழில்வாய்ப்புக்கள் அளிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேயவர்த்தனவிற்கும் இஸ்ரேலிய அதிகாரிகளுக்கும் இடையில் அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கான இந்தியத் தூதுவர் இட்டாய் தக்னருக்கும் அமைச்சருக்கும் இடையில் பத்தரமுல்லவில் அமைந்துள்ள விவசாய அமைச்சில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேலில் தொழில் வாய்ப்பு பெற்றுச் செல்லும் விவசாயிகளுக்கு தலா ஆயிரம் அமெரிக்க டொலர் மாத சம்பளமாக வழங்கப்படவுள்ளதுடன் 6 மாத கால ஒப்பந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு தொழில்வாய்ப்பு வழங்கப்படுவதன் மூலம் இஸ்ரேலில் பயன்படுத்தப் படும் நவீன விவசாய தொழில் நுட்பங் களை இலங்கையில் அறிமுகப்படுத்த வழி ஏற்படும் என விவசாய அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (6-4)



புன்னாலைக் கட்டுவன் மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 31 மாணவர்களுக்கு இலவச சப்பாத்து வழங்கும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது. இதில் ஆசிரியர் க.ஜெகதீஸ்வரன் மாணவி ஒருவருக்கு சப்பாத்து வழங்குவதையும் அருகில் அதிபர் இரா. ஜெயக்குமார், ஆசிரியர்கள் பூ.பிரகாஷ், திருமதி அனிற்றா ராஜி அன்ரன், இ.சேனுஜா ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# அரசின் தூர நோக்கற்ற நடவடிக்கைகளே நிபுணர் குழு நியமிக்கப்படுவதற்கு காரணம்

## மங்கள சமரவீர எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த நான்கு வருடங்களாக அரசாங்கம் மேற்கொண்டு வரும் தூர நோக்கற்ற



நடவடிக்கைகளே நிபுணர்கள் குழு நிமிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைந்ததென ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நாடு இன்று எதிர்நோக்கி வரும் சர்வதேச அழுத்தங்களுக்கு தற்போதைய ஆட்சியாளர்களே பொறுப்பு சொல்ல வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கைத் தலைமைக் காரியாலயம் முற்றுகையிடப்பட்டு நடத்தப்பட்ட போராட்டங் கள் தொடர்பில் கருத்து வெளியிடும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படக் கூடிய அபாயம் நிலவுவதாகவும் இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் நன்மதிப்பிற்கு பாரிய களங்கத்தை ஏற்படுத்தும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை மீது சர்வதேச சமூகம் சிறந்த நன்மதிப்பை கொண்டிருந்ததாகவும் சர்வதேச நீதிமன்றில் இலங்கையர்களை ஆயர்ப்படுத்தக் கூடிய சாத்தியத்தை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தடுத்து நிறுத்தியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

2002ஆம் ஆண்டு சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் குற்றவாளிகளை ஆஜர்படுத்துவது தொடர்பான பிரகடனத்தில் அப்போது பிரதமராக செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிடவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுப்புற சண்டித்தனங்களை கைவிட்டு சர்வதேச சமூகத்துடன் அரசாங்கம் உறவுகளைப் பேணுவதற்கு முனைப்புக் காட்டவேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார் (6)

# உறவினர் வீடுகளில் தங்கியுள்ளோரை வாக்காளராக பதிவுசெய்ய முடியாதநிலை

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்து வட பகுதியில் உள்ள முகாம்களில் தங்கியிருந்த நிலையில் உறவினர்களின் வீடுகளுக்கு சென்றவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க கிராம சேவகர்கள் முன்னைய பதிவுச் சான்றிதழ்களை கோருவதால் அவர்களை வாக்காளர்களாக பதிவு செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என சுதந்திரம் மற்றும் நீதியான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (பவ்ரல்) தெரிவித்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்களில் பலர் தாம் முன்னர் வாக்காளர்களாக பதிவு செய்திருந்த இடங்கள் தொடார்பான தகவல்களை அறியாத நிலையில் உள்ளனர் எனவும் இடம்பெயர்ந்த நிலையில் வடக்கு- கிழக்கில் உள்ள தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியிருக்கும் மக்களின் எண்ணிக்கை குறித்து இதுவரை சரியான புள்ளி விபரங்கள் வெளியிடப்படவில்லை எனவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் இடம்பெயர்ந்த மக்கள் தமது உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாகவும் இடம்பெயர்ந்த மக்களை வாக்காளர்களாக பதிவு செய்யும் நடவடிக்கைகளை முக்கியமான விடயமாக கருதி உரிய வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்குமாறு அரசாங்கத்திடம் கோரவுள்ளதாகவும் ஹெட்டியாராச்சி குறிப்பிட்டுள்ளார். (6-4)

# ஆஸி.புகலிடக் கோரிக்கையாளர்களை கிழக்குத் தீமோருக்கு அனுப்பத்திட்டம்?

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களை கிழக்குத் தீமோருக்கு அனுப்பி வைக்க பிரமதர் ஜூலியா கிலார்ட் ஆலோசித்துள்ளதாக அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சேனக்க வல்கம்பாய தெரிவித்தார்.

இது தொடர்பாக அவுஸ்திரேலியப் பிரதமர் கிழக்குத் தீமோர் ஜனாதிபதியிடம் கடந்த செவ்வாய்க்கிழமை பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையின் புகலிடக்கோரிக்கையாளர்களின் கோரிக்கைகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகளைக் கிழக்குத் தீமோரில் மேற்கொள்வதற்கும் பிரதமர் கிலார்ட் உத்தேசித்துள்ளார்.

எவ்வாறாயினும் கிழக்குத் தீமோரின் சில அரசியல் முக்கியஸ்தர்கள் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களின் வேண்டுகோள்கள் குறித்து விரைவில் பரிசீலிக்கப்படும் என அவுஸ்திரேலியப் பிரதமர் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

பெருந்தொகைப் பணத்தை செலவிட்டு அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோரி சட்டவிரோதமாக வருவதற்கு முயற்சிக்க வேண்டாம் என பிரதமர் கிலார்ட் இலங்கையர்களை கேட்டுக் கொண்டதாகவும் இலங்கை உயர் ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். (6)

# இரங்கற் கூட்டம்

(குருநகர்)

மாவட்ட சாரண ஆணையாளராகவும் குருநகரின் சமூக சேவையாளருமாகப் பணியாற்றிய இராஜசிங்கம் டோறசின் மறைவை ஒட்டி இரங்கற் கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கலையார்வன் கு.இராஜப்பு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் குருநகரைச் சேர்ந்த கழக மன்றம் கடற்சாரணர் ஆலய பக்தி சபைப் பிரதி நிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். (4-39)

# 09.07.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

## நிகழ்வுகள்

- 455- அவிட்டஸ் மேற்கு ரோமப் பேரரசின் மன்னனானான்.
- 1357-புனித ரோமப் பேரரசர் நான்காம் சார்ள்ஸ் பிராகா நகரத்தில் சார்ள்ஸ் பாலத்திற்கு அடித்தளம் நாட்டினார்.
- 1755-பென்சில்வேனியாவில் பிரெஞ்சு மற்றும் குடியேற்ற துணை இராணுவக்குழு பிரித்தானியப் படைகளைத் தோற்கடித்தனர்.
- 1790- பால்டிக் கடலில் இடம்பெற்ற மோதலில் சுவீடனின் கடற்படையினர் ரஷ்யக் கப்பல்களை பெரும் எண்ணிக்கையில் கைப்பற்றினர்.
- 1810-ஒல்லாந்து நாட்டை நெப்போலியன் தனது பிரெஞ்சு இராச் சியத்துடன் இணைத்துக் கொண்டான்.
- 1816- ஆர்ஜென்டீனா ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1863 அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஹட்சன் துறைமுகம் மீதான தாக்குதல் முடிவுக்கு வந்தது.
- 1868- அனைத்து ஆபிரிக்க அமெரிக்கர்களுக்கும் முழுக் குடியுரிமை வழங்கும் சட்ட மூலம் ஐக்கிய அமெரிக்காவில் நிறைவேற்றப்பட்டது.
- 1900- அவுஸ்திரேலியா கண்டத்தில் தனித்தனியே குடியேற்ற நாடுகளாக இருந்த மாநிலங்கள் அவுஸ்திரேலியப் பொதுநலவாயத்தின் கீழ் ஒன்றிணைக்க விக்டோரியா மகாராணி ஒப்புதல் அளித்தார்.
- 1903-யாழ்ப்பாணத்தில் இந்து வாலிபர் அமைப்பு (YMHA) உருவாக்கப்பட்டது.
- 1918-டென்னசியில் நாஷ்வில் என்ற இடத்தில் இரண்டு தொடரூந்துகள் மோதிக்கொண்டதில் 101 பேர் கொல்லப்பட்டு 171 பேர் படுகாயமடைந்தனர்.
- 1943- இரண்டாம் உலகப் போர்: நேச நாடுகள் சிசிலி மீதான தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1948- பாகிஸ்தான் தனது முதலாவது அஞ்சல் தலையை வெளியிட்டது.
- 1982- ஐக்கிய அமெரிக்க போயிங் விமானம் லூசியானாவில் வீழ்ந்ததில் அதில் பயணஞ் செய்த 146 பேரும் தரையில் இருந்த 8 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1991-30 ஆண்டுகளின் பின்னர் தென்னாபிரிக்கா ஒலிம்பிக் விளையாட்டுக்களில் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.
- 1995-யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் இலங்கை இராணுவத்தின் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
- 2002-ஆபிரிக்க ஒன்றியம் அடிஸ் அபாபாவில் அமைக்கப்பட்டது. தென்னாபிரிக்க அதிபர் தாபோ உம்பெக்கி இவ்வமைப்பின் முதலாவது தலைவரானார்.
- 2006-சைபீரியாவில் 200 பேரை ஏற்றிச் சென்ற பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்ததில் 122 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006-உலகக் கிண்ணக் காற்பந்துப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இத்தாலி பிரான்சை வென்று நான்காவது தடவையாக உலகக்கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.
- 2006-அக்னி-111 ஏவுகணை ஒரிசாவில் சோதிக்கப்பட்டது. அதன் இரண்டாவது அடுக்கு இயங்கமறுத்தமையால் குறுகிய தூரத்தையே சென்றடைந்தது.


### பிறப்புகள்.

- 1929- ஏ.எம்.ராஜா, பின்னணிப் பாடகர் (இ.1989)
- 1930- கே. பாலச்சந்தர், தமிழ் திரைப்பட இயக்குநர்.
- 1956- டொம் ஹாங்க்ஸ், அமெரிக்க ஹொலிவுட் நடிகர்.

### இறப்புகள்

- 2009-சி.ஆர்.கண்ணன் தமிழக எழுத்தாளர்.

1995-யாழ்ப்பாணத்தில் நவாலி புனித பேதுருவானவர்தேவாலயம் மீது இலங்கை விமானப்படை யினரால் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் உட்பட 141 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.



# பொருளியல் II-I

## 01 மணித்தியாலம்

10ஆம் பக்கத் தொடர்ச்சி...

**எல்லா வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. பின்வரும் விடயங்களில் பிரதிப் பணமாக கருதப்பட முடியாத விடயம் எது?
1. காசோலைப் பணம்
2. செலான் வங்கியின் கடன் அட்டை
3. வணிக வங்கியின் வரவு அட்டை
4. வணிக வங்கிகளினூடாக சர்வதேச வர்த்தகத்தின் பயன்படுத்தப்படும் இலத்திரனியல் பணம்

02. மத்திய வங்கியின் மையத்தொழிற்பாடு அல்லாத விடயம் யாது?
1. தேசிய நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
2. அரசுக்கானதும் நிதி நிறுவனங்களினதும் ஆலோசகப் பணி
3. நிலவும் நாணய மாற்று விகிதத்துக்கு பொறுப்பாக இருத்தல்
4. வெளிநாட்டுச் சொத்துக்களின் முகாமை
5. வங்கிகளின் நிதி மாற்றல் செயற்பாடுகளுக்கு பொறுப்பாக இருத்தல்

03. x என்பவர் ரூபா 1000 ஐ கொடுத்து 400 ரூபா பெறுமதியான ஆடைகளையும் 600 ரூபா பெறுமதியான வானொலியையும் கொள்வனவு செய்தார். பணத்தொழிற்பாடு தொடர்பாக மிகச்சரியான விடயம் எது?
1. பணம் பண்டமாற்றூடகமாக தொழிற்படுகிறது
2. பணம் பெறுமதியை அளவிடும் கருவியாக தொழிற்படுகிறது
3. பணம் கொடுக்கல் வாங்கலாகவும், பெறுமான திரட்டாகவும் தொழிற்படுகிறது.
4. பணம் கொடுக்கல் வாங்கலாகவும், மாற்றூடகமாகவும் தொழிற்படுகிறது.
5. பணம் கொடுக்கல் வாங்கல் அலகாகவும் பெறுமதியை அளவிடும் கருவியாகவும் தொழிற்படுகிறது.

04. பொருளாதாரமொன்றிலுள்ள வணிக வங்கியொன்று திரட்டிய வைப்புக்கள் 10000 ரூபா கையிலுள்ள காசோதுக்கு 200 ரூபா, மத்தியவங்கியில் வைப்பு 1000 ரூபா, கடன்கள் கணக்கு 8800 ரூபா இந்நிலையில் வங்கிக்கான ஒதுக்கு வீதம் 10% ஆயின் வங்கி தனது தொழிற்பாடுகளை மிகை குறைந்த ஒதுக்கு இல்லாததாக மேற்கொண்டால் புதிய நிலையில் மொத்த வைப்புக்கள், மொத்த கடன்களின் அளவு
1. 12000 ரூபா, 10800 ரூபா
2. 10200 ரூபா, 10800 ரூபா
3. 12000 ரூபா, 9000 ரூபா
4. 10200 ரூபா, 9000 ரூபா

05. இலங்கையினது சென்மதி நிலுவை பட்டியலில் வருமானக் கணக்கில் இடம்பெறாத விடயம் யாது?
1. வெளிநாட்டிலிருந்து கிடைத்த கடன் வட்டி
2. வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்கிய பங்கு இலாபம்
3. வெளிநாட்டிலுள்ள இலங்கையர் அனுப்பிய பணம்
4. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தொழிலாளர் நட்டஈடு
5. வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம்

06. ஒரு நாட்டின் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்ததென கருதுக. இதனால் கருதுவது யாதெனில்
1. ஒரு நாட்டின் சென்மதி நிலுவையின் வர்த்தக நிலுவையின் மோசமான நிலை காணப்படுகிறது
2. நாணயமாற்று வீத தளம்பலை ஈடுசெய்ய வெளிநாட்டு ஒதுக்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
3. சென்மதி நிலுவையின் நீதியின் குறையை ஈடுசெய்ய அலுவல்கள் சார் ஒதுக்குகள் பயன்படுத்தப்பட்டமை
4. சென்மதிநிலுவையின் மொத்த நடைமுறைக்கணக்கு மீதியின் குறையை ஈடுசெய்ய வெளிநாட்டு ஒதுக்குகள் பயன்படுத்தப்பட்டமை
5. நாட்டின் கடன்படு தகுதி குறைவடையும்

07. செயல்திறன் மிக்க சர்வதேச வர்த்தக பாதுகாப்பு என்பது
1. இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளால் உள்ளூர் கைத்தொழிலின் சேர்ந்த பெறுமதியில் ஏற்படும் அதிகரிப்பு மாற்றம்
2. இறக்குமதிகளில் இருந்து உள்ளூர் பொருளாதாரத்தைப் பாதுகாத்தல்
3. சர்வதேச சந்தையிலான தாக்கத்திலிருந்து உள்ளூர் பொருளாதாரத்தைப் பாதுகாத்தல்
4. உலகப் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து உள்ளூர் தொழிலை பாதுகாத்தல்

08. நாடொன்றின் வர்த்தக மாற்று விகிதபெறுமானம் 128 இருந்து, அடுத்த ஆண்டில் 134 ஆக உயர்ந்தது இதனால் பெறப்படும் பிரதான முடிவு யாதெனில்,
1. வர்த்தக நிலுவையில் சாதகநிலை ஏற்படும்
2. வெளிநாட்டுச் சொத்து மட்டம் பெருகுதல்
3. ஓரலகு பண்ட எற்றுமதியின் இறக்குமதி கொள்வனவு ஆற்றல் முன்னரை விட அதிகரிக்கும்
4. சர்வதேச வர்த்தக நன்மைகள் அதிகரித்துச் செல்லுகின்றன.

09. A, Bஆகிய நாடுகள் சம ஆற்றலுடைய 500 வளங்களை கொண்டுள்ளன. ஓரலகு சாதன உள்ளீட்டின் மூலம் அவை சீனி, ஆடை உற்பத்திகளில் ஈடுபடும் போது வெளியீட டாற்றல் வருமாறு
சீனி உற்பத்தி : A நாடு = 2 அலகு B நாடு 3 அலகு
ஆடை உற்பத்தி : A நாடு = 4 அலகு B நாடு
1. ஒப்பீட்டில் A நாடு சீனியை ஏற்றுமதி செய்து ஆடையை இறக்குமதி செய்வது
2. ஒப்பீட்டில் A நாடு ஆடையை ஏற்றுமதி செய்வது சீனியை இறக்குமதி செய்தல்
3. A நாடு சீனி, ஆடை உற்பத்திக்கு ஒப்பீட்டில் சிறந்தது
4. B நாடு சீனி, ஆடை உற்பத்தியில் ஒப்பீட்டில் சிறந்தது.

10. பின்வருவனவற்றில் எது கேள்வித்தூண்டல் பணவீக்கத்தை ஏற்படுத்த பொறுப்பாக உள்ள காரணி
1. தொழிலாளரிடையே வேலையின்மை அதிகரித்தல்
2. தொழிற்சங்கங்கள் பலமடைதல்
3. வணிக வங்கிகளின் தனியார் துறைக்கான கடன்கள் மட்டுப்படுத்தப்படல்
4. வட்டி வீதத்தை மத்திய வங்கி குறைத்தல்
5. மாறும் ஒதுக்கு வீதம் அதிகரித்தல்

11. பின்வருவனவற்றில் திரவத்தன்மை ஒழுங்கில் சரியான தொகுதி யாது
1. 500 ரூபா தாள, திறைசேரி உண்டியல், மாற்று உண்டியல், மோட்டார் வாகனம், பங்குபத்திரம்
2. 500 ரூபா தாள், மாற்று உண்டியல், திறைசேரி உண்டியல், வீடு
3. 500 ரூபா தாள், வீடு ,திறைசேரி உண்டியல், பங்கு பத்திரம்
4. 1500 ரூபா, காசோலை,சேமிப்பு தவணை வைப்பு, திறைசேரி உண்டியல், பங்கு பத்திரம்

12. பின்வருவனவற்றில் கிட்டிய பணமாக கருதமுடியாத விடயங்கள்
- A. வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு
- B. கடன் அட்டைகள்
- C. உரிமம் பெற்ற சிறப்பு வங்கி வைப்புக்கள்
- D. பதிவு செய்த நிதிக்கம்பனி வைப்புக்கள்
- E. வெளிநாட்டுப் புழக்கப் பணம்
- F. வைப்புச் சான்றிதழ்
- G. திறைசேரி உண்டியல்
- H. வரவு அட்டைகள்
- I. இலத்திரனியல் பணம்
- J. உள்நாட்டு நாணய சேமிப்பு தவணை வைப்புக்கள்

1. B, E, F, G 2. B, E, F,H, I 3. B, E, H, I 4. B, E,G, J

13. குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட புதிய கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டி எவ்ஆண்டை அடிப்படையாகக் கொண்டது
1. 1972 2. 1952 3. 1969 4. 2002 5. 2006

14. இலங்கை மத்திய வங்கி கையாளும் பணக்கொள்கையின் பிரதான ஊடுகடத்தல் பொறிமுறை யாது
1. செலவாணி வீத செல்வழி முறை
2. எதிர்பார்ப்புக்கள் செல்வழி முறை
3. சொத்து விளைவுகள் செல்வழி முறை
4. கடன் கிடைப்பனவு தன்மை செல்வழி முறை
5. வட்டிவீத செல்வழி முறை

15. இலங்கையில் வறுமை நிலையை காட்டும் அதி தாழ்வறுமைக் கோட்டின் கீழ் உள்ளோர் குடும்பங்கள் ஏறத்தாழ 15-16% என மதிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் செயல் திட்டங்களில் எதனை வறுமை ஒழிப்புக்கான மிகச்சிறந்த செயல் திட்டமாக கொள்ளலாம்
1. வறிய பிரதேசங்களில் இலவசக் கல்வி திட்டங்கள்
2. வறிய பிரதேசங்களில் விவசாயம், சிறுகைத்தொழில்,வர்த்தகம் தொடர்பான சுயவேலை வாய்ப்பு கடன் திட்டங்கள்
3. வறிய பிரதேசங்களில் உணவு முத்திரை போன்ற வறுமை ஒழிப்பு நிவாரணங்கள்
4. செல்வந்தர்கள் மீது வருமானவரிகள், சொத்து உச்ச வரம்புகள்

16. தெற்காசிய நாடுகளில் இலங்கையின் மனிதவள அபிவிருத்தி உயர்வானதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2005 இல் இலங்கையின் மனிதவள அபிவிருத்தி சுட்டியின் பெறுமானம் அண்ணளவாக யாது?
1. 0.71 2. 0.74 3. 0.76 0.78

17. பேண்தகு பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி என்பது தொடர்பாக மிக சரியான விடை
1. பொருளாதார வளர்ச்சி அபிவிருத்திகளை நிலையாக பாதுகாத்தல்
2. பொருளாதார வளர்ச்சி அபிவிருத்திகளை தொடர்ந்தும் அதிகரித்தல்
3. இயற்கை வளங்களை தொடர்ந்தும் பாதுகாத்தல்
4. நிகழ்கால பொருளாதார வளர்ச்சி அபிவிருத்தி தொடர்பாக எதிர்கால சந்ததிகளின் இழப்புக்களை குறைத்தல்
5. நிகழ்கால வளங்களை முழுமையாக கையாண்டு அடையக் கூடிய அபிவிருத்தி மட்டங்களை அடைதல்

18. சர்வதேச வர்த்தக கூட்டுக்கள் தொடர்பாக பொருளாதார சங்கங்கள் என்பதற்கு பொருத்தமான பொருளாதார ஒத்துழைப்பு
1. தெற்காசிய நாடுகளின் வர்த்தக உடன்படிக்கை
2. ஆசிய பசுபிக் நாடுகளின் பொருளாதார உடன்படிக்கை
3. தென்கிழக்காசிய நாடுகளின் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை
4. ஐரோப்பிய பொருளாதார சமூகம்
5. உலக வர்த்தக அமைப்பு

19. இலங்கையினதும் பிரதான ஏற்றுமதிகளான தேயிலை, ஆடை தயாரிப்பு என்பவற்றின் விலைகள் 8% அதிகரிக்க அவற்றின் ஏற்றுமதி அளவுகள் 14%அதிகரித்தது, அதே வேளை இறக்குமதி விலைகள் அளவுகள் 9% அதிகரித்தன. இவை வர்த்தக மாற்று விகிதம் வர்த்தக நிலுவை, வருமான வர்த்தக மாற்று விகிதம், என்பவற்றில் ஏற்படுத்தும் தாக்கங்களாவன

| | வர்த்தகமாற்றுவிகிதம், | வருமானவர்த்தகமாற்றுவிகிதம் | வர்த்தகநிலுவை |
|---|---|---|---|
| 1. | முன்னேறும் | வீழ்சியுறும் | முன்னேறும் |
| 2. | வீழ்ச்சியுறும் | முன்னேறும் | வீழ்ச்சியுறும் |
| 3. | வீழ்ச்சியுறும் | முன்னேறும் | முன்னேறும் |
| 4. | வீழ்ச்சியுறும் | வீழ்ச்சியுறும் | வீழ்ச்சியுறும் |
| 5. | முன்னேறும் | முன்னேறும் | முன்னேறும் |

20. நிதி நிறுவனங்களின் கொடுகடன் தரமிடல் என்பதால் கருதுவது யாது
1. நிதி நிறுவனங்கள் தாம் பெற்ற கடன்களை உரிய காலத்திலும் வட்டியுடனும,முழுமையாகவும் மீளச் செலுத்த கூடிய தன்மையை தரமிடல்
2. நிதி நிறுவனங்களில் கடன்கள் பெற்றோர் அதனை உரிய காலத்தில் வட்டியுடனும் முழுமையாகவும் மீளச் செலுத்தக்கூடிய தன்மையை தரமிடல்
3. வணிக வங்கிகள் போன்றவை வழங்க கூடிய கடன்களில் அளவை மதிப்பிடல்
4. வணிக வங்கிகள் திரட்டிய கடன்களை போல எவ்வளவு கடன்களை வழங்க கூடிய தன்மையை உடையதை மதிப்பிடல்

# கொழும்பு தமிழ்ச் சங்கம் நடாத்தும்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை

**தரம்-13** | **முன்னோடிப் பரீட்சை** | **ஆனி 2010**

பொருளியல்-I-I நேரம் : 1 மணி

**அறிவுறுத்தல்கள் -**

**இப்பகுதியில் 20 வினாக்களுள்ளன இவையனைத்துமே கட்டாய வினாக்களாகும்.**

**ஒவ்வொரு வினாவிற்கும் 02 புள்ளிகள் வீதம் இப்பகுதிக்கான மொத்தப்புள்ளிகள் 40 ஆகும்.**


**ஒவ்வொரு பல்தேர்வு வினாவிற்கும் ஒரு சரியான விடை மட்டுமே உண்டு அதனை இனங்கண்டு அதற்குரிய பெட்டியில் புள்ளடியிடுக.**

**பகுதி I இற்கான எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுதல் வேண்டும்**

**பகுதி I பகுதி IIஆகிய இரு பகுதிகளுக்கும் விடை எழுதிய பின்னரே இரண்டையும் ஒன்றாகக் கட்டி கையளிக்கவும்.**

01. பொருளாதாரப் பண்டம் என்பது யாது?
1.இலாபத்தில் விற்கப்படும் ஒரு பண்டம்
2.அதிகரித்துச் செல்லும் திறன் கொண்ட நிலைமைகளின் கீழ் உற்பத்தி செய்யப்படும் ஒரு பண்டம்
3.தனியார் துறையினால் மட்டும் நிரம்பல் செய்யப்படக்கூடிய ஒரு பண்டம்
4.அமையச் செலவு உள்ள ஒரு பண்டம்
5.பொதுத்துறையினால் மட்டும் நிரம்பல் செய்யப்படக்கூடிய ஒரு பண்டம்

02.பின்வரும் வரிப்படம் துப்பாக்கி, பாண் என்பவற்றால் வரையறுக்கப்பட்ட ஒரு உற்பத்தி சாத்திய வளையியைக் காட்டுகிறது.




இப் பொருளாதாரம் தனது உற்பத்தியை A புள்ளியிலிருந்து B புள்ளிக்கு மாற்றுமாயின் துப்பாக்கி,அரிசி என்பவற்றின் அமையச் செலவு பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?

1.பாணின் அமையச் செலவு அதிகரிக்க துப்பாக்கியின் அமையச் செலவு குறையும்
2.பாணின் அமையச்செலவு குறைய துப்பாக்கியின் அமையச் செலவு அதிகரிக்கும்.
3.பாண்,துப்பாக்கி என்ற இரண்டினதும் அமையச் செலவு அதிகரிக்கும்
4.பாண்,துப்பாக்கி என்ற இரண்டினதும் அமையச் செலவு குறையும்.
5.துப்பாக்கியின் அமையச் செலவு மாறாதிருக்க பாணின் அமையச் செலவு அதிகரிக்கும்.


03.பின்வரும் கூற்றுக்களில் சந்தைப் பொருளாதாரத்தின் பிரதான இயல் பொன்றினை விபரிக்கும் கூற்று எது?
1.அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுத்திட்டத்திற்கு அமைய நிறுவனங்கள் பொருளுற்பத்தி பற்றி தீர்மானித்தல்
2.வெவ்வேறு பொருளாதார நடவடிக்கைகளிடையே சாதனங்களின் பயன் பாட்டை சந்தையினூடாக இயங்கும் சார்பு விலைகள் நிர்ணயித்தல்
3.உற்பத்தி தொடர்பாக ஊழியச் செறிவான முறைகளைப் பயன்படுத்தல்
4.எப்பொழுதும் கேள்வி நிரம்பல் சக்திகளினால் விலைகள் நிர்ணயிக்கப்படுதல
5.அரசாங்கமும் தனியார்துறையினரும் இணைந்து வள ஒதுக்கீட்டினை நிர்ணயித்தல்

04.அண்மைக்காலத்தில் அரசியின் விலை அதிகரித்ததன் விளைவாக இடம் பெறமுடியாத நிகழ்வு யாது?
1.அரிசிக்கான கேள்விக்கோடு வலப்புறம் நகருதல்
2.அரசிக்கான கேள்வித் தொகை குறைவடைதல்
3.கோதுமை மாவிற்கான கேள்வி அதிகரித்தல்
4.கோதுமை மாவிற்கான கேள்விக் கோடு வலப்புறம் நகருதல்
5.அரிக்கான கேள்விக்கோடு மாற்றமடையாதிருத்தல்.

05.இழிவுப் பண்டம் ஒன்றிற்கான கேள்வியின் வருமான நெகிழ்ச்சி
1.பூச்சியமாகும்.
2.நெகிழ்வற்றது
3.அலகு நெகிழ்ச்சியாகும்
4.எதிர்க்கணியமானது
5.நேர்க்கணியமாகாது

06.சந்தைக் கேள்வி என்பது
1.கேள்வியானது நிரம்பலுக்கு சமமாகவில்லாதநிலையாகும்
2.சந்தையானது சாதன்களைத் திறமையாக ஒதுக்கீடு செய்யாத நிலையாகும
3.நிறுவனங்கள் ஒரு தொழிலைவிட்டுவெளியேறுவதால் ஏற்படும் நிலையாகும
4.மத்திய ரீதியில் திட்டமிடப்பட்ட பொருளாதாரங்களோடுமட்டும் தொடர்புள்ள நிலையாகும்.
5.அரசாங்கமானது கட்டில்லாச் சந்தைச் சமநிலை விலையிலும் பார்க்க உயர்ந்த விலையை நிர்ணயிக்கும் நிலையாகும்.

07. பின்வரும் வரைபடத்தைக் கருத்திற்கொண்டு அரசாங்கத்தினால் பெறப்பட்ட வரிமானம் எவ்வளவு?
1.ரூபா 200
2.ரூபா 285
3.ரூபா 250
4.ரூபா 315
5.ரூபா 255




08.ஒரு நிறுவத்தின் நிலையான செலவுகள் இரட்டிக்குமாயின் எல்லைச் செலவு
1.இரட்டிக்கும்
2.இருமடங்கிற்கும் மேலாக அதிகரிக்கும்
3.மாறாதிருக்கும்
4.50 வீதத்தால் அதிகரிக்கும்
5.100 வீதத்ததால் குறையும்.

09.ஒரு நிறுவனம் ஒரு பண்டத்தில் அலகுகளை உற்பத்தி செய்தது. அல கொன்றுக்கான சராசரிச் செலவு ரூபா 8000 ஆகும். தற்பொழுது உற்பத்தி யினை 21 அலகுகளாக அதிகரிக்கப்படுகின்றது. மேலதிக உற்பத்தியின் காரணமாக சராசரிச் செலவு ரூபா 7900 ஆக குறைந்தது. இம் மேலதிக உற்பத்தியின் எல்லைச் செலவு யாது?
1.ரூபா 10,000 2.ரூபா 376 3.ரூபா 5900
4.ரூபா 7900 5.ரூபா 470

10.மாற்றல் கட்டணம் என்பது,
1.உற்பத்திக் காரணிகள் மாற்றுப் பயன்பாட்டை கொண்டிருப்பதனால் பெறும் வருமானம்
2.வேலையற்றவர்களுக்கும் ஓய்வு பெற்றவர்களுக்கும் அரசினால் வழங்கப் படும் கொடுப்பனவுகள
3.சிக்கன வாடகையின் ஒரு பகுதியைக் குறித்து நிற்கும்
4.ஒரு உற்பத்திக்காரணி தனது பயன்பாட்டின் போது பெறுகின்ற குறைந்த பட் சக்கொடுப்பனவு
5.குறைந்தபட்ச கொடுப்பனவைவிட மேலதிகமாக பெறும் வருமானம்.

11.அலகு நெகிழ்ச்சிக்குரிய பண்டமொன்றின் விலை 10% ஆல் வீழ்ச்சியடை யின் உற்பத்தியாளரின் வருமானம்,
1.10% ஆல் வீழ்ச்சியடையும்
2.10% ஆல் அதிகரிக்கும்
3.0.1 % ஆல் வீழ்ச்சியடையும்
4.0.1 % ஆல் அதிகரிக்கும்
5.வருமானம் மாறாதிருக்கும்.

12. ஒருவரின் வருமானம் ரூபா 25,000 லிருந்து ரூபா 27,000 ஆக அதிகரித்தால் அவரது சேமிப்பு ரூபா 900 லிருந்து ரூபா 1300 ஆக அதிகரித்தது.எல்லை சேமிப்பு நாட்டம் யாது?
1.0.2 2. 0.3 3.0.4 4.0.6 5.0.8

13.ஒரு திறந்த பொருளாதாரத்தில் மொத்தக் கோள்வியை அதிகரிக்கச் செய்யும் செலவீடுகள் எது?
1.I+G+X 2.S+T+m 3.S=I 4.T=G
5.C+I+T

14. பின்வருவனவற்றுள் எது உண்மையற்றது,
1. Y+C+I+G+ (x-m) 2.Y=C+I+G+Nx
3.Y=C+I+T 4.Y=C+S
5.Y+M=C+I+G+z

15. உற்பத்தியில் உள்ளார்ந்த செலவுகள் இருக்குமாயின்,
1.கணக்கியல் இலாபம் பொருளியல் இலாபத்தைவிட உயர்வாக இருக்கும்
2.பொருளியல் இலாபம் எப்போதும் சமமாக இருக்கும்
3.பொருளியல் இலாபம் கணக்கியல் இலாபத்தைவிட உயர்வாக இருக்கும்
4.கணக்கியல் இலாபம் எப்போதும் பூச்சியமாக இருக்கும்
5.பொருளியல் இலாபமும் கணக்கியல் இலாபமும் சமனாக இருக்கும்.

16.பின்வருவனவற்றுள் எது தரப்பட்ட ஒரு ஆண்டிற்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்துக்கொள்ளப்படும்?
1.கம்பனி ஒன்றினது 1000 பங்குகளின் கொள்வனவு
2.பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் சடுபடும் ஒரு தரகு நிறுவனத்திற்கு ஒருவன் தான்வாங்கிய பங்குகளின் பெறுமதியின் 2% செலுத்துதல்
3.ஓய்வு பெற்ற ஒரு அரசாங்க சேவையாளர் பெறும் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு
4.பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பெறும் மாதாந்த புலமைப் பரிசில்படி
5.திறைசேரி உண்டியல்களின் மீது அரசாங்கம் செலுத்தும் வட்டிக்கொடுப் பனவு.

17.தூய பொதுப்பண்டத்திற்கு ஓர் உதாரணம்
1.தேசிய பாதுகாப்பு 2.பாண் துண்டொன்று
3.கல்வி 4.தொலைக்காட்சிப்பெட்டியொன்று
5.நெடுஞ்சாலையொன்று

18.தனியுரிமைப் போட்டியிலிருக்கும் நிறுவனமொன்று நீண்டகாலத்தில்
1. பூரணநெகிழ்ச்சி கொண்ட கேள்வி வளையியை எதிர்நோக்கும்.
2. காரணிமொத்தச் செலவை ஆகக்குறைந்தாக்கும் அளவிலும் பார்க்கக் கூடிய தொகையை உற்பத்தி செய்யும்
3.சராசரி மொத்தச் செலவை ஆகக்குறைந்ததாக்கும் அளவிலும் பார்க்க குறைவான தொகையை உற்பத்தி செய்தல்
4.சராசரி மொத்தச் செலவை ஆகக்குறைந்தாக்கும் தொகையினை உற்பத்தி செய்யும்.
5.சராசரி இலாபத்திலும் பார்க்கக் கூடிய இலாபத்தை உழைக்கும்.

19.கடன் பெறுதல் மூலம் நிதிப்படுத்தப்படும் ஒரு பற்றாக்குறையானது
1.மொத்த நுகர்வுச் செலவினை எப்போதும் உயர்த்தும்
2.அதற்கான நிதியங்கள் வெளிநாட்டு மூலங்கள் வாயிலாக கிடைக்குமாயின் தேசிய படுகடனைப் பாதிக்கும்
3.தேசிய படுகடனை அதிகரிக்கச் செய்யும்
4.எப்போதுமே பண நிரம்பலை அதிகரிக்கச் செய்யும்
5.மெய்வளங்கள் திரட்டப்படுவதைப் பாதிப்பதில்லை.

20.பின்வருவற்றுள் எது மொத்தவளங்களில் சேர்க்கப்படுவதில்லை.
1.பொருட்கள் காரணியில்லாச் சேவைகளின் ஏற்றுமதி
2.பொருட்கள் காரணியில்லாச் சேவைகளின் இறக்குமதி
3.விவசாயத் துறையின் கூட்டிய பெறுமதி
4.கைத்தொழில் துறையின் கூட்டிய பெறுமதி
5.சேவைகள் துறையின் கூட்டிய பெறுமதி

## பொருளியல் I-II
### 02 மணித்தியாலங்கள்

**ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இருவினாக்களைத் தெரிவு செய்து மொத்த நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி-A

01. இலங்கையில் கணினி ,மோட்டார் வாகனம் ஆகிய இரு பொருட்களுக்கான உற்பத்திகள் நடைபெறும் போது வளங்கள் யாவும் பூரணமாகப் பயன்படுத்தப்பட்டு கணினி உற்பத்தியில் 600 அலகுகளையும், மோட்டார் வாகன உற்பத்தியில் 800 அலகுகளையும் ஒரே நேரத்தில் உற்பத்தி செய்கின்றது. 0.75 அலகு மோட்டார் வாகன உற்பத்தியை இழக்க வேண்டும்.

அ. இத்தரவுகளைப் பயன்படுத்தி கணினி உற்பத்தியை கிடையச்சிலும் மோட்டார் வாகன உற்பத்தியை நிலைக்குச்சிலும் காட்டத்தக்க வகையில் நேர்கோட்டு உற்பத்தி இயல்தகவு வளையியை வரைக.

(3 புள்ளிகள்)

ஆ.கணினி உற்பத்தியை 300 அலகுகளால் அதிகரிக்க வேண்டுமாயின் அமையச் செலவு யாது?

(3 புள்ளிகள்)

இ.வரைபடத்தில் காட்டியவாறு எவ்வகை அமையச் செலவு காணப்படும்?

(3 புள்ளிகள்)

ஈ கணினி உற்பத்திச் சார்பாக புதிய நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டமை காரணமாக உற்பத்தி இயல்தகவு வளையியின் எல்லாப் புள்ளிகளிலும் கணினி உற்பத்திகள் சார்பாக 100 அலகுகளைக் கூடுதலாக உற்பத்தி செய்யக் கூடியதாக உள்ளது. இந்நிலைமையினை வரைபடத்தில் காட்டுக.

(3 புள்ளிகள்)

உ.இப்புதிய உற்பத்தி இயல்தகவு வளையியின்படி ஒரு அலகு கணினி உற்பத்தி அதிகரிப்பதற்கான அமையச் செலவு யாது?

(3 புள்ளிகள்)

02. அ.கலப்புப் பொருளாதாரமொன்றில் அரசாங்கமானது வருமானச் சமனின்மை தொடர்பான பிரச்சினைகளை எவ்வழிகளினூடாக கையாளுகின்றது?

(3 புள்ளிகள்)

ஆ.உற்பத்திக் காரணி ஒதுக்கீடு செய்யும் ஒரு வழியாக விலைப் பொறி முறையின் பிரதான பிரதிகூலங்கள் எவை?

(3 புள்ளிகள்)

இ.சமதர்மப் பொருளாதாரத்தில் சமூக நலன் எனும் பதத்தின் விளக்கம் யாது?

(2 புள்ளிகள்)

ஈ கட்டில்லாச்சந்தைப் பொருளாதாரமொன்றில் விலைப்பொறிமுறையானது எவ்வழிகளில் உற்பத்திச் சாதனங்களை ஒதுக்கீடு செய்கின்றது?

(3 புள்ளிகள்)

உ.சமதர்மப் பொருளாதாரம் ஏன் குறைபாடுடையது எனப்படுகின்றது?

(4 புள்ளிகள்)

03. சந்தையில் குறித்த ஒரு பண்டம் தொடர்பாக பின்வருவன முறையே கேள்வி வழங்கல் வளையிகளின் இரு புள்ளிகள் எனக் கொள்க.

| விலை (ரூபா) | கேள்வித்தொகை (அலகுகள்) | நிரம்பல் தொகை (அலகுகள்) |
|---|---|---|
| 2 | 2500 | 300 |
| 40 | 500 | 2400 |

அ.நேர்கோட்டுத் தன்மை உள்ளது எனக் கொண்டு கேள்வி வழங்கல் வளையிகளை வரைக.

(2 புள்ளிகள்)

ஆ.மிகைக்கேள்வி நிரம்பல் 0ஆக உள்ளபோது விலை, தொகை யாது?

(2 புள்ளிகள்)

இ.சமநிலை விலையின் போது கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சிகளைக் கணிப்பிடுக.

(3 புள்ளிகள்)

ஈ. அட்டவணையில் இருந்து கேள்வி, நிரம்பல் சமன்பாடுகளைப்பெறுக?

(2 புள்ளிகள்)

உ.அறவிடக்கூடிய உயர்ந்தபட்ச விலையாக 10/= என அரசு விதிக்கும் போது சந்தையில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் எவை?

(4 புள்ளிகள்)

ஊ. எவ்வாறு வழமை நிலமைக்கு சந்தையை கொண்டு வரலாம்?

(2 புள்ளிகள்)

04.அ. நிலைபோட்டிச் சந்தையின் சிறப்பியல்புகள் எவை? (4 புள்ளிகள்)

ஆ தனியுரிமைப் போட்டிக்கும் தனியுரிமைக்கும் இடையிலான ஒற்றுமைகள், வேற்றுமைகள் இவ்விரண்டு தருக.

(4 புள்ளிகள்)

இ.குறைந்து செல்லும் விளைவுகளுக்கும்,குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவுகளுக்கும் இடையே ஏதேனும் வேறுபாடு இருப்பின் அது யாது?

(3 புள்ளிகள்)

ஈ.எச்சந்தர்ப்பங்களில் ஒரு உற்பத்திக்காரணியின் மொத்த உழைப்புகளில் *மாற்றல் வளங்கள* அடங்கியிருக்கும்? வரிப்படம் மூலம் விளக்குக.

### பகுதி B

05. குறித்த ஓர் ஆண்டுக்கான தேசிய வருமானக் கணக்குகள் பற்றிய தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

| | |
|---|---|
| வாடகை | 2000 |
| கூலிகளும் சம்பளங்களும் | 6000 |
| வட்டி | 500 |
| சுய தொழிலின் கூட்டுவருமானம் | 200 |
| பங்கு இலாபங்கள் | 300 |
| சமூகப்பாதுகாப்புக் கொடுப்பனவுகள் | 100 |
| கூட்டுத்தாபன இலாபவரி | 400 |
| தனிநபர் மீதானவரி | 200 |
| மாற்றல் கொடுப்பனவு | 50 |
| வெளிநாட்டிலிருந்து பெற்றவை | 400 |
| வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டவை | 300 |

பின்வருவனவற்றைக் கணிக்குக.
ஆ. 1.மொத்த உள்நாட்டு வருமானம்
2.தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம்
3.மொத்த தேசிய வருமானம்
4.தனிநபர் வருமானம்
5.கையாள் தகு வருமானம்

(10 புள்ளிகள்)

ஆ.இலங்கையில் வீட்டுத்துறைக்கான பிரதான அரச மாற்றல் கொடுப்பனவுகளைப் பட்டியல்படுத்துக.

(3 புள்ளிகள்)

இ.தேசிய வருமானம்,மக்கள் வருமானத்தில் இருந்து எவ்வகையில் வேறுபடுத்துகின்றது? (2 புள்ளிகள்)

06. அ. எல்லை நுகர்வுநாட்டத்தினதும் எல்லை சேமிப்புநாட்டத்தினதும் கூட்டுத் தொகை எப்போதும் ஒன்றிற்கு சமமாக இருப்பது ஏன்? (3 புள்ளிகள்)

ஆ.ஒரு திறந்த பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்டத்தில் "செலுத்துதல" "பின்வாங்கல்" என்பவற்றின் கருத்தை விளக்குக.

இ. திறந்த பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு,

$C=1000+0.8yb$ $T=0.27$
$I=500$ $X=380$
$G=300$ $m=200$

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
1. சமநிலைத் தேசிய வருமான மட்டத்தைக் கணிப்பிடுக.
2.செலவிடத்தக்க வருமானம் யாது?
3.நுகர்வின் அளவு யாது?
4.சேமிப்பின் அளவு யாது?

(8 புள்ளிகள்)

07. அ.அரசாங்கத்தின் பிரதான பொருளாதார தொழிற்பாடுகளைக் கூறுக.

(3 புள்ளிகள்)

ஆ.எதிர்க்கணிய வெளிவாரி விளைவு என்பதன் கருத்து யாது அத்தகைய பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதாரணம் தருக?

(3 புள்ளிகள்)

இ.எந்நிலைமைகளின் கீழ் நெறிப்படுத்தப்படாத சந்தைகள் சாதனங்களைத் திறமையாக ஒதுக்கீடு செய்வதில் தோல்வியடையும்?

(4 புள்ளிகள்)

ஈ. அரசாங்கத்தின் தோல்விஎன்பதனால் கருதப்படுவது யாது?

(3 புள்ளிகள்)

உ. பேரினப் பொருளாதாரத்தின் இரு குறிக்கோள்களும் எவை?

(2 புள்ளிகள்)

08. அ. அரச பாதீட்டின் ஆரம்பப் பற்றாக்குறை என்பதனால் கருதப்படுவது என்ன?

(2 புள்ளிகள்)

ஆ.சந்தைக் தோல்வி ஏற்படுவதற்காக காரணங்கள் எவை?

(5 புள்ளிகள்)

இ. இலங்கையில் பொது நிறுவனங்கள் மறுசீரமைப்பதற்கு முன்வைக்கப்பட்ட நான்கு முக்கிய சீர்திருத்தங்களை பெயரிட்டுக் குறிப்பிடுக.

(4 புள்ளிகள்)

ஈ. பாரிய வரவு செலவுத்திட்டக் குறைநிலைகளின் பொருளாதார நட்டத்தை ஆராய்க. (4 புள்ளிகள்)

# பொருளியல் II-II

## 02 மணித்தியாலங்கள்

பிரிவு "அ" விலிருந்து இரு வினாக்களையும பிரிவு " ஆ" விலிருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களிற்கு மட்டும் விடை எழுதுக.

### பிரிவு "அ"

01) 1. பணத்தை வைத்திருப்பதற்கான உத்தேச நோக்கம் " என்பதன் பொருள் யாது?

(03 புள்ளிகள்)

2) பணத்தின் சுழற்சி வேகம் என்பதன் பொருள் யாது? அது எவ்வாறு அளவிடப்படுகின்றது?

(04 புள்ளிகள்)

3)விரிந்த பணம் என்பது ஒரு ஓரினத்தன்மை வாய்ந்த சொத்து அல்ல. அது பல வகையான சொத்துக்களை உள்ளடக்கியதாகும். இக்கூற்றை பரிசீலிக்கவும்.

(04 புள்ளிகள்)

4) மக்கள் தமது சொத்துக்களில் ஒரு பகுதியை வருமானம் உழைக்காத சொத்தாகிய பண வடிவில் வைத்திருப்பது ஏன்?

(04 புள்ளிகள்)

02) 1) 'நாணயத்தளம்'என்பதால் நீர் கருதுவது யாது? அதன் உள்கூறுகள் எவை?

(03 புள்ளிகள்)

2) பண நிரம்பலை குறைப்பதற்கு மத்திய வங்கி கையாளும் முறைகள் எவை?

(03 புள்ளிகள்)

3) தாம் பெற்றுக் கொள்ளும் அனைத்து மிகை ஒதுக்குகளின் முழுத் தொகைக் கும் கடன்களைக் கொடுக்கும் வர்த்தக வங்கிகளைக் கொண்டுள்ள போட்டித் தன்மை கொண்ட வங்கித் தொழில் முறைமையொன்றையும் 25 வீதம் சட்ட நியதி ஒதுக்கு விகிதத்தில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளை யும் கருதுக. பொது மக்களிடமிருந்தான ரூபா 2000 மில்லியன் வைப்பு களை அவை கொண்டிருக்கின்றது. மொத்த பணநிரம்பல் ($m_1$) ரூபா 2500 மில்லியனாகும்.

(a)வங்கிகள் கொடுத்துள்ள கடன்களின் தொகை எவ்வளவு?

(03 புள்ளிகள்)

(b) பொது மக்கள் தாம் வைத்திருக்கும் பணத்தாள்கள் பணக்குற்றி கள் என்பவற்றில் ரூபா 100 மில்லியனை வைப்புச் செய்துள்ளனர் எனக் கருதுக. வங்கிகள் தமது இறுதிக் கடன் கொடுத்தலைச் செம்மையாக்கும் பொழுது மொத்த வைப்புக்களிற்கு என்ன நிகழும் என விளக்குக?

(03 புள்ளிகள்)

(c) அனைத்து செம்மையாக்கங்களும் செய்யப்பட்டதன் பின்னர் பண நிரம்பலின் ($m_1$) பெறுமதி யாது?

(03 புள்ளிகள்)

03) இரண்டு நாடுகளினால் உற்பத்தி செய்யப்படும் இரண்டு பொருட்கள் தொடர்பான தகவல்கள் உமக்கு கீழே தரப்பட்டுள்ளன.

| நாடு | ஊழியம் ஒன்றிற்கான வெளியீடு | |
|---|---|---|
| நாடு | சொக்கலேட் (kg) | பால் (l) |
| சுவிற்சர்லாந்து | 2 | 1 |
| நியூசிலாந்து | 4 | 3 |

1.சொக்கலேற் மற்றும் பால் உற்பத்தியில் முழு நன்மையை அனுபவிக்கும் நாடு எது?

(01 புள்ளி)

2. இரு நாடுகளும் 1000 ஊழிய மணித்தாயாலங்களை கொண்டுள்ளது என்றும் அது இரு உற்பத்தி நிறுவணங்களிற்கிடையில் சமமாக பங்கிடபபட்டுள்ளது எனவும கருதுக. சிறப்புத்தேர்ச்சிக்கு முன் இரு பொருட்களினதும் உலக உற்பத்தி யாது?

(03 புள்ளிகள்)

3. ஒவ்வொரு நாடும் இரண்டு பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவை வேறுவேறாகக் கணிக்க?

(04 புள்ளிகள்)

4. ஒப்பீட்டு அனுகூலக் கோட்பாட்டின் ஊடாக உமது முடிவைப் பெறுவதற்கு மேலே கணிப்பிட்ட அமையச் செலவுத் தகவல்களை நீ எவ்வாறு பயன்படுத் துவீர்?

(03 புள்ளிகள்)

5. இரு நாடுகளும் முழு சிறப்புத் தேர்ச்சி முறையினைப் பின்பற்றி இருப்பின் சிறபபுத் தேர்ச்சியின் பின்னரான உலக உற்பத்தி என்னவாக இருக்கும்.

(04 புள்ளிகள்)

04) தரப்பட்ட ஆண்டின் ஒரு நாட்டினுடைய வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.
(எல்லா பெறுமதிகளும் மில்லியன் ரூபாவில் எனக் கருதுக)

| | |
|---|---|
| பண்ட ஏற்றுமதி | 1400 |
| பண்ட இறக்குமதி | 2000 |
| வருமான பெறுகைகள் | 60 |
| வருமான் கொடுப்பனவுகள் | 140 |
| தேறிய தனியார் மாற்றல்கள் | 400 |
| தேசிய அலுவல்சார் மாற்றல்கள் | 30 |
| சேவைகளின் ஏற்றுமதி | 500 |
| சேவைகளின் இறக்குமதி | 450 |
| தேறிய நீண்டகால தனியார் மூலதன பெறுகைகள் | 20 |
| தேறிய நீண்டகால அரச மூலதன பெறுகைகள் | 60 |
| தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் | 100 |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | 20 |
| தேறிய மூலதன மாற்றல்கள் | 80 |

1. பின்வருவனவற்றை கணிக்க
a) சென்மதி நிலுவையின் நடைமுறைக்கணக்கு மீதி

(02 புள்ளிகள்)

b) மூலதன மற்றும் நிதியியல் கணக்கு மீதி

(02 புள்ளிகள்)

c)முழு மொத்த மீதி (03 புள்ளிகள்)

d) நாணய அசைவுகள்

(02 புள்ளிகள்)

2.பின்வரும் கருப்பொருள்களை வேறுபடுத்துக

a).நாணய பெறுமதி இறக்கம், நாணயத்தேய்வு

(03 புள்ளிகள்)

b)பெயரளவு தாக்கமுள்ள நாணயமாற்று வீதம், உண்மைத்தாக்கமுள்ள நாணயமாற்று வீதம்

(03 புள்ளிகள்)

### பிரிவு " ஆ"

05) அரசியல்,பொருளாதாரம் மற்றும் சமூக கலந்தாலோசனையில் இன்று GSP + ஒரு முக்கிய தலைப்பாக அடிக்கடி எடுத்துரைக்கப்பட்டு வருகின்றன.

1.GSP + என்றால் என்ன? (02 புள்ளிகள்)

2.GSP +இனால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் என எதிர்பார்க்கும் நன்மைகள் யாவை?

(04 புள்ளிகள்)

3.ஏற்கனவே இலங்கைக்கு அளிக்கப்பட்ட GSP + சலுகையை ஏன் ஐரோப்பிய ஒன்றியம் மீளப் பெற்றது.

(03 புள்ளிகள்)

4. இலங்கைப் பொருளாதாரம் GSP +வரிச்சலுகையை மீளப் பெற்றதால் ஏற படும் எதிர்பார்த்த இழப்புக்களை எவ்வாறு தடுக்கும். இதற்கு இலங்கைப் பொருளாதாரம் எவ்வாறு முகம் கொடுத்தல் வேண்டும்.

(05 புள்ளிகள்.

06) 1. குறுங்கால பொருளாதார வளர்ச்சியையும் ,நீண்ட கால பொருளாதார வளர்ச்சியையும் வேறுபடுத்துக.

(03 புள்ளிகள்)

2. 'பொருளாதார வளர்ச்சிக்கு உயர்ந்த தேசிய சேமிப்பு மட்டம் அவசியமான தாக இருப்பினும் அது பொருளாதார வளர்ச்சிக்கு போதுமான ஒரு முன் நிபந் தனையன்று' இக் கருத்தினை ஏற்பீரா? உமது விடைக்கு காரணம் தருக?

(04 புள்ளிகள்)

3.பொருளாதார வளர்ச்சியானது அபிவிருத்திக்கு இட்டுச் செல்வதை உறுதிப்படுத துவதற்கு அரசாங்கம் பின்பற்றக்கூடிய குறிப்பிடத்தக்க கொள்கைகள் யாவை?

(04 புள்ளிகள்)

4. ஓர் அரசாங்கம் தனது பேரண்டப் பொருளியற் குறிக்கோள்களை எய்துவதற் குப் பயன்படுத்தக்கூடிய பிரதான கொள்கை நடவடிக்கைளை விபரிக்க.

(04 புள்ளிகள்)

07) 1.நாடுகளிற்குமிடையில் காணப்படும் வருமான இடைவெளி பற்றிய பெருமளவு உண்மை நிலையினைப் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் முறை யாது?

(03 புள்ளிகள்)

2.முழுவறுமை, சார்பு வறுமை என்ற எண்ணக்கருக்களை வேறுபடுத்திக் காட்டுக?

(03 புள்ளிகள்)

3.அபிவிருத்தியடையும் நாடுகளில் வறிய மக்கள் பொருளாதார வளர்ச்சியின் நன்மைகளைப் பெற முடியாதிருப்பதற்கான காரணங்களைக் கூறுக.

(04 புள்ளிகள்)

4. இலங்கையில் நகர்ப்புறத் துறையுடன் ஒப்பிடுகையில் கிராமியத் துறையில் உயர் வறுமை மட்டம் நிலவுகின்றமைக்கான காரணங்களைத் தருக?

(05 புள்ளிகள்)

08)1.இலங்கை உட்பட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சிக்கு தடையாகவுள்ள அதிமுக்கிய காரணிகள் யாவை?

(03 புள்ளிகள்)

2.இலங்கையின் முதலீட்டுச் சூழலில் காணப்படும் மிகவும் மோசமான தடங்கல்கள் யாவை?

(04 புள்ளிகள்)

3.உள்நாட்டு முதலீடுகளை விரிவுபடுத்த அண்மைக்காலத்தில் அரசு மேற் கொள்ளும் நடவடிக்கைகள் யாவை?

(04 புள்ளிகள்)


4.இலங்கையில் அண்மைய ஆண்டுகளில் பிராந்திய ரீதியான சமமின்மை அதிகரிப்பதற்குப் பங்களித்த காரணிகளை இனங்காண்க?

(04 புள்ளிகள்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# மனித உடல் ஆரோக்கியத்தில் விற்றமின் B இன் முக்கியத்துவம்

விற்றமின் B கூட்டத்தைச் சேர்ந்த விற்றமின்கள் 1900 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து விற்றமின் B ஆனது எவ்வாறு உடல் ஆரோக்கியத்தில் பங்களிப்புச் செய்கின்றது என்பதனைப் பற்றி ஆராய்ந்து, அதன் முக்




கியத்துவமும் தொழில்களும் தெளிவாக்கப்பட்டன.

விற்றமின் B கூட்டத்தைச் சேர்ந்த முக்கியமான விற்றமின்களாவன விற்றமின் B1-தயமின்(Thaiamine), விற்றமின் B2-ரைபோபிளேவின் (Ribo Flavin), விற்றமின் B3- நியாசின் (Niacin), விற்றமின் B5-பன்ரோதீனிக் அசிட்( Pantothenic acid), விற்றமின் B6- பைரி டொக்சின், பைரிடொக்சல், பைரி டொக்சமன் (pyridoxine,Pyridoxal & Pyridoxomine), விற்றமின் B7-பயோட்டின் (Biotin),



விற்றமின் B9-போலிக் அசிட்(Folic acid), விற்றமின் B12-கோபலமின்கள் (Cobalamins).

இவை மட்டுமன்றி மேலும் பல விற்றமின்கள் கண்டறியப்பட்டு, விற்றமின் B கூட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவையாவன:- விற்றமின் B8(Adenosine monophosphate), விற்றமின் B10 (Para-amino benzonic acid), விற்றமின் B11 pteryl-hepta -glutamic acid), விற்றமின் B13 (arotic acid) B14, விற்றமின் B15 (pangarnic acid), விற்றமின் B16 (Dimethyl glycine, விற்றமின் B17 (amygdlains), விற்றமின் B18, விற்றமின் B19, விற்றமின் B20 (carnitine), விற்றமின் B21, விற்றமின் B22 மற்றும் விற்றமின்கள் Bh,Bm,Bp,Bt,Bv,Bw,Bx என்பனவாகும்.

### B1-தயமின்(Thaiamine)

இது மாப்பொருளின் அனுசேபத் தொழிற்பாட்டுக்கு இன்றியமையாதது. அதாவது மாப்பொருளை எளிய வெல்லங்களாக மாற்ற உதவுகிறது. மற்றும் நரம்புத் தொகுதியின் சீரான தொழிற்பாட்டிற்கு முக்கியமாகவுள்ளது. அத்துடன் இதயம் மற்றும் தசைகளின் சீரான தொழிற்பாட்டிற்கு உதவுகிறது.

தயமின் பற்றாக் குறையால் பெரி பெரி (beri beri) நோய் ஏற்படுகிறது. பொதுவாக வாய்ப் பகுதி குறிப்பாக பற்கள், கன்னங்கள், முரசு ஆகிய பகுதிகள் பாதிக்கப்படுகின்றன.

ஆனால் தயமின் பற்றாக்குறை (Thaiamine deficiency) அரிதாகவே உள்ளது. அநேகமாக மது அருந்துபவர்களுக்கு இக் குறைபாடு ஏற்படுகிறது. ஏனெனில் மதுசாரம் (alcohol) ஆனது தயமின் அகத்துறிஞ்சப்படுவதை தடை செய்கிறது.

இவ்விற்றமின் முழுத்தானியங்கள், உருளைக் கிழங்கு, பன்றியிறைச்சி, கடலுணவுகள், ஈரல், அவரை வகை என்பவற்றில் காணப்படுகிறது.

### B2-ரைபோ பிளேவின் (Ribo Flavin)

இது சக்தியை உயர் மட்டத்தில் உற்பத்தி செய்வதில் முக்கியத்துவம் வகிக்கிறது. அதாவது மாப்பொருள், இலிப்பிட்டு, புரதம் அனைத்தினதும் அனுசேபத் தொழிற்பாட்டில் பங்களிப்புச் செய்கிறது. மேலும் நகம் (nail), தோல், தலை முடி ஆகியவற்றின் புதுப்பித்தலுக்கு தேவைப்படுகின்றது. இவ் விற்றமின் ஆனது தாவரங்களாலும் நுண்ணங்கிகளாலும் மட்டுமே தொகுக்கப்படுகிறது. விலங்குகளால் தொகுக்கப்படுவதில்லை.

இவ்விற்றமின் குறைபாட்டால் உதடுகள் பாதிப்புறுகின்றன. அதாவது உதடுகள் செந் நிறமடைந்து ஓரங்களில் வெடிப்புக்கள் அல்லது பிளவுகள் ஏற்படும் (cheilosis). மேலும் நாக்கில் அழற்சி (glos sitis) ஏற்படலாம்.

ரைபோபிளேவின் ஆனது பாற்பொருட்கள், ஈரல், பச்சைக் கீரை வகை, மரக்கறி வகைகள் என்பவற்றில் காணப்படும்.

### B3- நியாசின் (Niacin)

இது பிரதானமாக செக்ஸ் ஓமோன்களின் (sex hormones) தொகுப்பிற்கு அவசியமாகின்றது. அத்துடன் குரு திப் பாயத்திலுள்ள கொல ஸ்ரோலின் (serum cholesterol) அளவைக் குறைத்து குருதிச் சுற்றோட்டத்தை சீராக்குகிறது.



நியாசின் குறைபாட்டால் பெலகரா (pellagra) நோய் ஏற்படுகிறது. இவ் விற்றமினானது ஈரல், மீன், இறைச்சி, நட்ஸ் (Nuts), உலர்ந்த அவரை மற்றும் முழுத் தானியங் களிலும் காணப்படும்.

### B5-பன்ரோதீனிக் அசிட் (Pantothenic acid)


இவ்விற்றமின் ஆனது அதிரீனற் சுரப்பிகளின்(adrenal glands) செயற்பாட்டு வினைத்திறனைக் கூட்டுகின்றது. அத்துடன் இலிப்பிட்டு, மாப்பொருள் மற்றும் புரதத்தின் அனுசேபத் தொழிற்பாட்டிற்கு அவசியமாகின்றது.

இவ்விற்றமின் அநேகமான உணவுப் பொருட்களில் காணப்படுகிறது.

### B6- பைரிடொக்சின், (pyridoxine)

இது இலிப்பிட்டின் அனுசேபத்தில் பங்களிப்புச் செய்கிறது. மற்றும் பல்வேறு அமினோஅமிலங்களின் அனுசேபத்திற்கு தேவைப்படுகிறது. மேலும் இரைப்பை அகவணியில்(stomach lining) ஐதரோக்குளோரிக் அமிலத்தின் (Hcl) உற்பத்திக்கு உதவுகிறது. அத்துடன் செங்குருதிச் சிறுதுணிக்கை (RBC) மற்றும் பிற உடல்களின் (anty bodies) உற்பத்திக்குத் தேவைப்படுகிறது.

இவ்விற்றமின் ஆனது மீன், இறைச்சி, ஈரல், உருளைக்கிழங்கு, கோதுமை, வாழைப்பழம், உலர்ந்த அவரை என்பவற்றில் காணப்படும்.




### B7-பயோட்டின் (Biotin)

இவ்விற்றமின் ஆனது கிளைக்கோஜனின் (Glycogen) உருவாக்கம், கொழுப்பமிலங்களின் (Fatty acids) தொகுப்பு என்பவற்றுக்குத் தேவைப்படுகிறது.

பயோட்டின் பற்றாக்குறை முட்டைகளைப் பச்சையாக (raw eggs) உண்பதால் ஏற்படும். அதாவது முட்டை வெண்கருவிலுள்ள, அவிடின் (Avidin) எனப்படுகின்ற வெப்பத்தால் இலகுவில் அழிவடைகின்ற புரதம் ஆனது பயோட்டினுடன் மிக இறுக்கமாக இணைந்து, அதன் அகத்துறிஞ்சலைத் தடுப்பதால் உடலில் பயோட்டின் பற்றாக்குறை ஏற்படுகிறது.

இவ்விற்றமின் குடலில் வாழும் பக்றீறியாக்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. அத்துடன் பட்டாணிக் கடலை (peanuts), ஈரல், முட்டை மஞ்சட்கரு, வாழைப்பழம், காளான், வெள்ளரிப்பழம், திராட்சைப்பழம் என்பவற்றிலும் காணப்படும்.

### B9-போலிக்அசிட்(Folic acid)

இது அநேகமான அடிப்படை உயிர்ச் செயற்பாடுகளில் உயிர்ப்பாகவுள்ளது. eg:- DNA தொகுப்பு.

போலிக் அசிட் குறைபாட்டால் பல்வேறு விதமான புற்றுநோய்க்கான கலங்கள் உருவாகின்றன.

போதுமானளவு போலிக் அசிட்டை உள்ளெடுக்குமாறு கர்ப்பிணிப் பெண்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

ஏனெனில் ஸ்பைனா பிபிடா(spina pibida) எனப்படுகின்ற முதுகெ லும்புக்

**செல்வி.ராதிகா வசந்தரூபன்**
செய்முறை காட்டுனர், விலங்கியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

குறைபாடு பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகும். அதா வது இப் பிறப்புரிமைக் குறைபாடு போலிக் அசிட் பற்றாக்குறையால் ஏற்படுகிறது.

இவ்விற்றமின் ஆனது பச்சைக் கீரைகள், காய்கறிகள், ஈரல், சித்திரஸ் பழங்கள்(citrus fruits) அதாவது தோடை, எலு மிச்சை ஆகிய பழங்களிலும் மற்றும் காளான், அவரை என்பவற்றிலும் காணப்படுகின்றது.

### B12-கோபலமின்கள் (Cobalamins)

இவ்விற்றமின் அனைத்து உடற்கலங் களினதும் சரியான தொழிலுக்கு அவசியம். விசேடமாக என்பு மச்சை, நரம்பிழையம் மற்றும் செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் (RBC) உற்பத்தி. இவை தாவரங்களாலோ அல்லது விலங்குகளாலோ தொகுக் கப்படுவதில்லை. பக்றீறியாக்களால் (bacteria) மட்டுமே தொகுக்கப் படும்.

இவ்விற்றமின் குறைபாட்டால் தீங்கு விளைவிக்கக்கூடிய குருதிச்சோகை (pernicious anemia) ஏற்படலாம்.

கோபலமின்கள் முட்டை, இறைச்சி மீன் மற்றும் பாற்பொருட்களில் காணப்படுகின் றன.

பொதுவாக விற்றமின் B கூட்டத்தைச் சேர்ந்த விற்றமின்கள் நொதியத் தாக்கங்களில் துணை நொதியங்களாக (Co-enzymes) அல்லது துணைக் காரணிகளாக (co-factors) செயற்படுகின்றன. இவை நீரிற் கரையக் கூடிய விற்றமின்கள். இதனால் மேல திகமாக உள்ளெடுக்கப்படும் விற்றமின்கள் சிறுநீருடன்(urine) வெளியேற்றப்படுகின்றன.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 25

உலகில் உள்ள இரண்டு சுனாமி எச்சரிக்கை மையங்களில் ஒன்று ஹவாய் (Hawaii) இலுள்ள பசுபிக் சுனாமி எச்சரிக்கை மையம் (Pacific Tsunami Warning Centre) ஆகும். மற்ற சுனாமி எச்சரிக்கை மையம் எங்கு அமைந்துள்ளது.

விடைகளை 22-07-2010 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

Mr. S.Selvarajan
Editor, Section A
Jaffna Science Association
Dept. of Mathematics & Statistics,
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறையில் கலாநிதி மீனா செந்தில்நந்தனனிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 23க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கார்த்திகேசு செல்வரத்தினம்
வீரபத்திர கோவிலடி,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி.

**புதிர் 24 இற்கான விடை: பிளாட்டினம் (Pt)**

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 24**

சரியான விடை :..........................................
முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
:..........................................
கையொப்பம் :..........................................

## சிறுவர்களுக்கான கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு சிறுவர் பராமரிப்பு வேலைகள் திணைக்களம் தேசிய சிறுவர் சபையின் புதிய விஞ்ஞான உற்பத்தி படைப்புகள் குழுவினருடன் இணைந்து சிறுவர்களுக்கான கண்காட்சி ஒன்றினை நடத்த தீர்மானித்துள்ளது.

இக்கண்காட்சிக்கு 12 முதல் 18 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் பங்கு பற்ற முடியும் எனவும் படைப்புக்கள் சிறுவர்களின் சுய படைப்புக்களா என்பதை பாடசாலை வகுப்பாசிரியரும், கிராம சேவையாளரும் பெற்றோரும் உறுதிப்படுத்திய கடிதத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக சிறுவர் பகுதிக்கு அனுப்பி வைக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (6-4-7)

## அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுவதாக குற்றச்சாட்டு

(கொழும்புத்துறை)

அரியாலை அரசடி வீதியில் உள்ள காணிகளில் சட்ட விரோதமாக மணல் அகழ்வுகள் இரவு பகலாக நடைபெற்று வருவதாக குறிப்பிடப்படுகிறது.

இதனால் குடியிருப்புகள் குன்றும் குழியுமாக காணப்படுகிறது. சிலர் மணலைப் பதுக்கி வைத்து, விற்பனை செய்து வருவதாக காணி உரிமையாளர்கள் தெரிவிக்கின் றனர்.

உழவு இயந்திர உரிமையாளர் சிலரின் பொறுப்பற்ற சுயநல நோக்கா குடியிருப்பு காணிகள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுகிறது எனவும் அத்தோடு மழை காலங்களில் இப்பள்ளங்களில் வெள்ளம் நிரம்பியும் காணப்படுகிறது. தற்போது அரியாலை மணல் 7500 ரூபா தொடக்கம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-51)

## பலவருடங்களின் பின் வன்னியில் வீதிகள், மதகுகள் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பல வருடங்களின் பின்னர் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் வன்னி மாவட்டத்தில் சேதமடைந்த வீதிகள், மதகுகள் போன்றவற்றை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களப் பணிப்பாளர் த.சிவராஜசிங்கம் பணிப்பின் பேரில் வன்னி மாவட்ட பிரதம பொறியியலாளர் கே. ஜெயவீரசிங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன் பிரகாரம் கிளிநொச்சி மாவட்டத்தில் 4 வீதிகளும் 4 மதகுகளும்; முல்லைத்தீவு மாவட்டத்திலும் 4 வீதிகளும் 4 மதகுகளும் மற்றும் சில தடுப்புச் சுவர்களும் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதி கிடைக்கப் பெற்றதை அடுத்து மேற்குறித்த புனரமைப்பு வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் இத்திணைக்களம் வன்னியில் வீதிகள், மதகுகள், 'பாலங்கள் ஆகியவற்றை புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுவதும் குறிப்பிடத்தக்கது. (6-10)

## சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டவர்கள் கைது

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீன்பிடி உபகரணங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை குச்சவெளி பொலிஸாரும் புல்மோட்டை பொலிஸாரும் எடுத்த நடவடிக்கை காரணமாக 3 மீன்பிடி படகுகளுடன் 6 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் வெடிபொருட்களைப் பயன்படுத்தி மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது கடலில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக்காலமாக சட்டவிரோத மீன்பிடி இடம்பெற்று வருகின்றது. குச்சவெளி பிரதேச கடற்பகுதியில் வெடிபொருட்களையும் தடைசெய்யப் பட்ட வலைகளையும் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கை இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்படுகிறது. (6-4)

மொழிபெயர்ப்பு

1990ஆம்ஆண்டின் 4ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேடசட்டம் 4ஆம் பிரிவு)

## ஹட்டன் நஷனல் வங்கி P.L.C

## யாழ்ப்பாணம் கிளையின் பகிரங்க ஏலவிற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆவரங்கால் கிராமத்தில் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான பாதையின் எல்லையில் அமைந்துள்ள அண்மையில் இருக்கும் நீதிதோட்டம் என்றழைக்கப்படும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் வ.எம்ப்ரோஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 12.05.1970 திகதிய 1720 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்டு லொட் 02 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அத்துடன் அதனுள்ளடங்கும் வீட்டுக்கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இதன் பரப்பளவு 01 லாச்சம் 17.01 குலீஸ் (19.44 பர்ச்சஸ்) ஆகும்.

இவ்வாதனம் செல்வரத்னம் திருவருட்செல்வம் என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி P.L.C. இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

**ஆதனத்தை வந்தடைதல்:-** புத்தூர் நகரத்திலிருந்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பாதை வழியே அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவு சங்கம் வரை சென்றால் இதற்கு முன்னால் இவ்வாதனம் அமைந்துள்ளது.

17.07.2010 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு 28.11.2008 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 10.12.2008 ஆம் திகதிய த ஐலன்ட், திவயின, தினகரன் பத்திரிகைகளையும் பார்க்கவும். விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 18.06.2010 திகதிய அரசாங்க வர்த்தமானியையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை :** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

கொள்முதல் விலையில் 10% பிரதேச சபை மற்றும் பிரதேச சபை வரி மற்றும் அரசாங் கத்தினால் விதிக்கப்படும் வேறு வரிகளும் ஏல விற்பனையாளர் கட்டணம் 2.1/2% நொத்தாரிஸ் கட்டணம் ரூ.2000 இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ.500 சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஹட்டன் நஷனல் வங்கி P.L.C யில் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட் களுக்குள் செலுத்த தவறினால் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10% இழக்க வேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனம் மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு :**

பதில் பொது முகாமையாளர் (கடன் அறவிடுதல்) ஹட்டன் நஷனல் வங்கி, P.L.C., இல :479 T.B ஜயா மாவத்தை, கொழும்பு 10 தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி: 0112661821, 0112661815

I.W.ஜயசூரிய
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர் இல.83/5, போமலுவ பாதை, வடட் புலுவ, கண்டி.
தொலைபேசி : 081 2211025, 0714755974
பக்ஸ்: 081 2211025

(1826)

## இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்



www.inuvilkanthan.com

### இருபத்திரண்டாம் திருவிழா

### சப்பறம் ஏறி நீ வருவாய்

குறவள்ளிக் கந்தனே குன்றுவை வேலனே
செண்டுடை கோழியைக் கொடியிலே கொண்டவா
வண்டுறை வனத்திலே வள்ளியைக் கவர்ந்தவா
அஞ்சிடும் தேவரை காக்கவே உதித்தவா

வஞ்சனை கொண்ட அசுரரை அழிக்க
வெஞ்சினம் கொண்டு வேலுடன் சென்றாய்
வேருடன் பகைதனை வீட்டிலே வென்று களைதீர
பேரிணுவைப் பதியில் பெருங்கோயில் கொண்டாய்

துப்பரவான வீதியிலே எழில் சப்பறமேறி நீ அமர
சிற்றிடை மாதர் இருமருங்கில் சிற்பரங்கணபதி மறுமருங்கில்
நாதஸ்வரமேளம் நாற்றிசையிலும் ஒளி முழங்க
நால்வேதக் கயிற்றினை நானிலத்தோர் இழுத்து வர
நல்லருள் புரியும் கந்தன் நகையுடனே வீற்றிருந்தான்.

இணுவையூர்
செல்வம் பவானந்தமூர்த்தி.

### இணுவையூர் சண்முகா சரணம்

வள்ளி தெய்வானையின் மணவாளனாய் மாலைசூடி
எல்லையில்லா தெய்வமாக வடிவெடுத்தாய்
வேதனைகள் வரும் போதெல்லாம் முருகா
வேல் கொண்டு வந்திடுவாய்
நெற்றிக் கண்ணனிடமிருந்து உதித்தவனே
வெற்றிகள் பெற்றுத் தந்திடுவாய்
குன்றத்தில் அமைந்திடும் கோலமயிலானே
குறைகள் தீர்த்திட விரைந்து வாராய் வடிவேலா!

நடராசா கௌரி
அச்சுவேலி தெற்கு,அச்சுவேலி.

(1709)

## ஐ.நா.அலுவலக முற்றுகையில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றிய பொலிஸார் மீது விசாரணை

(கொழும்பு)

ஐ.நா. அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட வேளையில் கடமையில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசேட பொலிஸ் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

தேசிய சுதந்திர முன்னணி கட்சியின் தலைவரும் முற்றுகைப் போராட்டத்தை தலைமைதாங்கி நடர்த்தியவருமான விமல் வீரவன்சவினால் பொலிஸ் மா அதிபருக்கு செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

அமைச்சர் விமல் வீரவன்ச பொலிஸ் மா அதிபருக்கு செய்த முறைப்பாட்டில் கொழும்பு ஐ.நா. அலுவலகத்தில் பணிபுரியும் புலி உறுப்பினர்களிடமிருந்து இலஞ்சம் வாங்கிக் கொண்டு எம்மைத் தாக்கிய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டிருந்தது.

எனினும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய அதிகாரிகளிடம் ஏற்க னவே வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேலிடத்தில் கிடைக்கப் பெற்ற உத்தரவிற்கு அமைய ஐ.நா. உத்தியோகத்தர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்தியதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உத்தரவுகளை உரிய முறையில் கடைப்பிடித்த தம்மீது தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

போராட்டக்காரர்களின் மீது பொலிஸார் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை எனவும் சட்டம் ஒழுங்கை கட்டிக்காத்த அதிகாரிகள் மீது விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை அதிருப்தி அளிப்பதாகவும் அந்த உயர்மட்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். (6)

## கூட்டம்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட தேசிய நிர்மாணிகள் சங்க நிர்வாகிகளுக்கான கூட்டமொன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் .ஆனைப்பந்தியில் உள்ள அதன் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நிர்வாகிகள் தவறாது சமூகம் அளிக்குமாறு சங்கச் செயலாளர் எஸ்.மணிராஜா அறிவித்துள்ளார். (6-10)

# ஜப்பானியக் காதற் பாடல்களின்

# மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும் (3)



முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்
முன்னாள் ஆய்வாளர், டக்குயின் பல்கலைக்கழகம், டோக்கியோ, ஜப்பான்.

மேலும் ஒரே சொற்றொடர் இருபொருள் தரும் நிலையிலும் மன்யோசுப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய தொடர் பெரும்பாலும் ஓர் ஊர்ப்பெயருடன் இணைந் திருக்கும்.

தொடர் புலப்படுத்தும் ஒரு பொருள் பாடற் பொருளுடன் இணைந்து அவ்வூரிலுள்ள ஒரு பொருளைக் குறிப்பதாகவும் இன் னொரு பொருள் அவ்வூர் மக்கள் மரபாக அறிந்துள்ள ஒரு விடயத்துடன் தொடர்பு கொண்டதாகவும் அமையும். இத்தொடரை "ககெ கொதொப" (Kake Kotoba) எனக் குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக மன்யோசு 336 ஆம் பாடலில் அமைந்துள்ள ஒரு தொடரைக் காட்டலாம்.

சிரநு பி துகுசி (மன் :336)

SIRANUFITUKUSI வியப்புறு தீ துகுசி.

துகுசி TUKUSI என்பது ஒரு வளை குடா நகரத்தின் பெயராகும். இங்கு ஆண்டில் ஒரு முறை வியக்கத்தக்க வகையில் ஒரு தீச் சுவாலை உண்டாவது வழக்கம். இது மரபு மரபாக துகுசி நகர் வாழ் மக்கள் அறிந்த விடயமாகும். இதனையே சிரநு பி துகுசி என்னுந் தொடர் ஒரு பொருள் நிலையில் புலப் படுத்துகிறது.

ஆனால் இதே தொடரை சிர நுபி துகுசி எனப் பிரித்தும் பொருள் கொள்ளலாம். சிர என்றால் வெண்மை. நுபி என்றால் பருத்தி. எனவே சிர நுபி துகுசி என்னும் தொடர் வெண் பருத்தித் துகுசி என்றும் பொருள் தரும். இதுவே பாடற் பொருளின் தொடர்பு காட்டுதாக உள்ளது.

இதைவிட மன்யோசுப் பாடல்களின் மொழி நடை தனித்துவம் வாய்ந்ததாக உள்ளது.

தொடரமைப்பில் இடைச்சொற்களின் பயன்பாடு மிகவும் அருகியே காணப்படுகிறது. எனினும் பாடல்களிலே பயன்படுத் தப்பட்டுள்ள இடைச்சொற்களின் இயக்கம் தொடர் குறிக்கும் பொருளுடன் இறுகப் பிணிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பெயர் , வினைச் சொற்களைச் சார்ந்து வரும் இடைச் சொற்கள் பொருட்டெளிவை நன்கு புலப்படுத்தி நிற்கின்றன. அவற்றை "ககரிமுசுபி" (Kakri Musubi) என ஜப்பானிய இலக்கணச் சான்றோர் குறிப்பிடுகின்றனர். ஆனால் இடைச்சொற்கள் கொண்டமையாத தொடர்களும் பாடல்களிலே காணப்படுகின் றன. அத்தொடர்களின் தெளிவான பொருள் இலக்கணப் பயிற்சியுடையவராலேயே விள ங்கிக் கொள்ள முடியும்.

தற்கால ஜப்பானிய மொழியில் இலக் கண அமைப்பு மன்யோசு மொழியின் இலக் கண அமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட் டது. எனவே தற்கால மொழியமைப்பிலே பாடல்களுக்கு விளக்கம் தரும்போது மேல திகமான சொற்க்ளைப் பயன்படுத்த வேண் டியுள்ளது.

காலநிலையைக் குறிக்கின்ற சொற்கள் மன்யோசுப் பாடல்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டுள்ளன. தனிச்சொற்களா லும் தொடர்களாலும் காலநிலை பாடல்க ளிலே விளக்கப்பட்டுள்ளது. வேனிற்காலம் , கோடைகாலம் , இலையுதிர்காலம் , பனிக் காலம் என்னும் நான்கு பருவங்களும் பாடல்க ளிலே தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றன.

அப்பருவகாலம் தொடர்பான மக்கள் வாழ்க்கை நடைமுறைகளும் இயற்கை நிலையான மாற்றங்களும் ஒழுங்குபடப் பாடல்களிலே இணைக்கப்பட்டுள்ளன. மன் யோசுப் பாடல்களில் கூற்றுநிலைப் பாடல்க ளும் தன்னுணர்வுப் பாடல்களும் காலநி லைப்பாடல்களும் சிறப்பான அமைப்புக்க ளாக உள்ளன.

### 4.மொழிபெயர்ப்பு முயற்சிகள்

மன்யோசுப் பாடல்களின் மொழிபெ யர்ப்பு மேலைநாட்டு மொழிகளில் 19 ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கிவிட்டது. மன் யோசுப் பாடல் தொகுதியிலுள்ள கடைசிப் பாடலை (4516) 1834 ஆம் ஆண்டிலே கிளப்ரொத் (Klaproth) என்பவர் பிரான்சிய மொழியிலே மொழிபெயர்த்துள்ளார். 1871 இல் லியோன் டி ரொஸ்னி (Leon De Rosny)என்னும் பிரான்சிய அறிஞர் வெளி யிட்ட Anthologie Japanoise என்னும் நூலில் பிரான்சிய மொழியில் பெயர்க்கப் பட்ட 9 பாடல்கள் உள்ளன.

ஒஸ்ரிய அறிஞரான ஒகஸ்றப்பிஸ்மயர் (August Pfizmaier, 1808-1887) Proceedings of the Imperial Academy of Vienna என்னும் பிரசுரத்திலே 200 மன் யோசுப் பாடல்களை மொழிபெயர்த்து வெளி யிட்டார். 1880 இல் பசில் ஹோல் சேம் பலெயின் (Basil Hall Chamberlain) வெளியிட்ட Classical Poetry of the Japanese என்னும் நூலில் ஆங்கில மொழி யிலே பெயர்க்கப்பட்ட சில மன்யோசுப்பாடல் கள் இடம் பெற்றுள்ளன.

1897 இல் தோமிற்சு ஒகசக்தி (Tomitsu Okasaki) என்னும் ஜப்பானியர் லைப்ஸிக் பல்கலைக்கழகத்திற்கு மன்யோசு பற்றி எழுதிச் சமர்ப்பித்த முனைவர் பட்டத்திற்கான ஆய்வேட்டிலே பல பாடல்களை ஜெர்மன் மொழியிலே பெயர்த்து இணைத்துள்ளார். ஹித்தோமரோவினுடைய எல்லாப் பாடல்க ளையும் 1927 இல் அல்பிரட் லொறென் ஸென் (Alfred Lorensen) என்பவர் ஜெர் மன் மொழியிலே மொழி பெயர்த்து வெளி யிட்டுள்ளார்.

1935 இல் Three Hundred Manyo Poems என்னும் நூலை பேராசிரியர் தெத்சுஒ ஒகத (Tetsuo Okada) வெளி யிட்டார். இந்நூலில் 300 மன்யோசுப் பாடல் கள் ஆங்கில மொழியிலே பெயர்க்கப்பட்டுள் ளன. பேராசிரியர் அசத்தரோ மியமொரி (Asataro Miyanmori) Mater Pieces of Japanese Poetry-Ancient and Modern என்னும் நூலினை இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார்.

இதில் முதலாம் தொகுதி மூன்றிலொரு பங்கு ஆங்கில மொழியில் பெயர்க்கப்பட்ட மன்யோசுப் பாடல்களைக் கொண்டது. 1940 இல் 1000 மன்யோசுப் பாடல்களைக் கொண்ட ஒரு தொகுதி The Nippon Gak ujutsu Shinkokai என்னும் குழுவினரால் வெளியிடப்பட்டது. ஜப்பானியல் அறிஞரான டொனல்ட் கீன் (Donld Keene) இத்தொகு திக்கு ஆராய்ச்சி முன்னுரை வழங்கியுள் ளார்.

மன்யோசுப் பாடல்கள் முழுவதையும் முதலிலே ஆங்கில மொழியில் பெயர்த்தவர் டாக்டர் ஜே.எல்.பியர்சன் Dr.J.L.Pierson) ஆவார். ஏறக்குறைய 32 ஆண்டுகளை இம்மொழி பெயர்ப்புக்காக அவர் செல விட்டுள்ளார். 1930 இல் தொடங்கிய மொழி பெயர்ப்பு 1969 வரை தொடர்ந்தது. 1963 இல் மன்யோசு 20 ஆவது தொகுதி வெளி யிடப்பட்டது. 1964 இல் மன்யோசுப் பாடல் களில் பயன்படுத்தப்பட்ட முழுமை யான தலையணைச்சொற்றொடர்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டார். இவரது மொழி பெயர்ப்புகள் பாடவேறுபாடு , இலக்கணக் குறிப்பு , ஜப்பானிய உரையாசிரி யர்களின் வேறுபட்ட விளக்கங்கள் , தலையணைச் சொற்றொடர் விளக்கங்கள் என்பவற்றையும் கொண்டதாக அமைந்துள்ளது.

(தொடரும்)

---

# அவசர கால நிலைமைகளை எதிர்கொள்வதற்கான உபகரணங்கள் ஐ.சி.ஆர்.சியினால் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அவசர கலா நிலைமை களை எதிர்கொள்வதற்கு அவசதியாக உறை விடங்கள் மற்றும் நீர் விநியோக உபகரணங் களை இலங்கை செஞ்சிலுவைச் சங்க அமைப்பு நன்கொடையாக வழங்கியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது,

யாழ்ப்பாண ஐ.சி.ஆர். பணியாகம் தற் காலிக உறைவிடங்கள் மற்றும் நீர் விநியோ கத்திற்கான உபகரணங்களை தனது முதன் மைப் பங்களிப்பான இலங்கைக் செஞ்சிலு வைச் சங்கத்திற்கும் (இ.செ.சி.ச.) தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக் கும் நன்கொடையாக வழங்கியுள்ளது.

எதிர்காலங்களில் யாழ். குடாநாட்டின் அவ சர கால நிலைமைகளின் போது இன் நிறுவ னங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு இக்கருவி கள் உபயோகமுள்ளதாக இருக்கும்.

இ.செ.சி.ச. க்கு வழங்கியவைகளில் குடும்பத்துக்கான 225 கூடாரங்களும் 385 தார் பொலின் விரிப்புகளும் அடங்கும். அத்துடன் ஆயிரம் கி.சீமெந்து 925கி ஆணிகள் மற்றும் உறைவிடங்கள் நிறுவு வதற்கு உதவும் அரிவாள்கள் , சுத்தியல்கள் , அலவாங்கு மற்றும் மண்வெட்டிகள் போன் றன வும் நன்கொடையில் வழங்கப்பட்டன. அவசர கால நிலைமைகளில் உறைவிடங் கள் அமைக்க 250 குடும்பங்களுக்கு இவை உபயோகத்தை அளிக்கும். யாழ். குடா நாட்டில் கிணறுகளை சுத்தம் செய்வதற்கு உதவியாக இ.செ.சி.ச. ஐந்து நீர்ப் பம்பி களையும் பெற்றுக்கொண்டது. நன்கொடை யின் ஒரு பகுதியாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபைக்கு மொத் தம் 34 ஆயிரம் லீற்றர் நீரை சேமித்து வைக் கக்கூடிய 11 நீர் கொள்கலன்களையும் ஐ.சி.ஆர். சி. வழங்கியது. இதன் மூலம் ஒரு வருக்கு நாளாந்தம் 15 லீற்றர் வீதம் , 2500 பேருக்கு குடிநீர் கிடைக்க வசதி கிட்டும். இச்சபை மேலும் 2 நீர்ப்பம்பிக்ளை ஐ.சி. ஆர்.சியிடம் இருந்து பெற்றுக் கொண்டது.

ஐ.சி.ஆர்.சியுடன் நெருங்கிய பங்காளி யாக பணியாற்றும் இ.செ.சி.ச. இன் அனர்த்த பதி லிறுப்பு நிகழ்ச்சித்திட்டங்களில் ஆற்றலை மேம்படுத்த இந்த அவசர காலத்துக்கான உபகரணங்கள் பயன் அளிக்கும் எனவும் தேசிய நீர்வளங்கல் மற்றும் வடிகால் அமைப் புச் சபைக்கு இன்னும் அநேகமானோ ருக்கும் அவசர கால நிலைமைகளில் குடிநீர் வழங்க இது வசதி அளிக்கும் என்றும் ஐ.சி. ஆர்.சியின் யாழ்ப்பாண பணியக முதல்வர் புளோறன்ஸ் கிலேட் அம்மையார் தெரிவித்தார்.

யுத்தம் முடிவிற்கு வந்ததும் உருவான தேவைகளை எதிர்கொண்ட நாடுகளில் பணி யாற்றிய விசாலமான அனுபவம் ஐ.சி. ஆர். சிக்கு உண்டு இந்நிறுவனம் இலங்கையில் 1989 முதல் பணியாற்றி வருகிறது. தனிப் பட்டோரதும் சமுகங்களினதும் மனிதாபி மான தேவைகளில் தொடர்ந்தும் உதவி களை அதிகாரிகளின் சம்மதத்துடன் வழங்க இது காத்து நிற்கிறது என அந்த அறிக் கையில் குறிப்பிடப்படுகிறது. (6-4)

# வைத்தியசாலைகள் தோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள் வைத்தியசாலைகள் தோறும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது வடமராட்சி பகுதியில் நுளம்பின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதோடு டெங்கு நோய்க்கு பலரும் இலக்காகி வருவது தெரிந்ததே.

இதனை அடுத்து பாடசாலை மாணவர் கள் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். முதற் கட்டமாகத நெல்லியடி மத்திய மகா வித்தியா லய மாணவர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்தை சுத்திகரிப்பு செய்யும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வலயத்தைச் சேர்ந்த மற்றைய பாட சாலை மாணவர்கள் சுற்று வட்ட அடிப்படை யில் வைத்தியசாலை துப்பரவு பணிகளில் ஈடுபடவுள்ளதாக பாடசாலை வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது. (6-10)

---

# இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரி வில் FORUT நிறுவனத்தின் அனுசரணை யுடன் பின்வரும் பயிற்சி நெறிகள் நடை முறைப்படுத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளை பயில விரும்பும் மீளக்குடியமர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இன்றைய தினம் பிரதேச செயலக தொழிற்பயிற்சி அபிவிருத்தி உதவியாளர்களுடன் தொடர்பு கொள்ளு மாறு பிரதேச செயலர் இ.அன்ரன் யோகநாயகம் கேட்டுக்கொள்கின்றார்.

பயிற்சி நெறிகளின் விபரம் வருமாறு,

* மோட்டார் வண்டி ,முச்சக்கரவண்டி திருத் துதல் (1 வருடம்)
* வீட்டு மின் உபகரணங்கள் திருத்துதல் (1 வருடம்)
* வீட்டு மின் சுற்று (6 மாதங்கள்)
* இரும்புருக்கு வேலைகள் (6 மாதங்கள்)
* அழகுக்கலைப் பயிற்சி (6 மாதங்கள்).

(6)

# தெய்வீகப் பேருரை

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலை கந்த சுவாமி ஆலயம் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் வருடாந்த உற்சவங்கள் கடந்த 17ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெற்று வருகின்றன.

இதில் நாளை சனிக்கிழமை தேர்த் திரு விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த் தோற்சவமும் நடைபெறவுள்ளது. இவ்விரு தினங்களிலும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தெய்வீகப்பேருரைகளை வழங்கவுள்ளார். (6)

யானை சேற்றில் அமிழும்போது தவளையும் எட்டி உதைக்கும் - மநு

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மிகச் சிறிய நாடான இலங்கை ஐ.நா.சபையை அவமதிக்கிறது

இலங்கையில் நடந்த 'வன்னிப் போர்' தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐ.நா.சபை நான்கு பேர் அடங்கிய விசாரணைக் குழுவொன்றை நியமித்ததைத் தொடர்ந்து,இலங்கை அரசு வெறுப்பும், கடுப்பும் அடைந்துள்ளது.

ஐ.நா.சபை மீது கொண்ட தாளாத கோபத்தினால் என்ன செய்வது ஏது செய்வது என்று யாதும் புரியாமல் இலங்கை அரசு தத்தளிப்பதைப் பார்க்கும்போது ,வேதனையே மிஞ்சுகிறது.

உலகில் அமைதியை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே ஐக்கிய நாடுகள் சபை. உலக நாடுகள் அந்த உயரிய அமைப்புக்குரிய மதிப்பை அளிக்கவேண்டும்.

எனினும் சிறிய நாடான இலங்கை ஐ.நா. சபைக்கு இம்மியும் மதிப்பளிக்காத நிலையைக் காணும்போது ,

இலங்கை அறியாமல் நடந்து கொள்கின்றதென்னும் உண்மை வெளிப்படுகின்றது.

அதிலும் விமல் வீரவன்சவின் மதிகெட்ட நடவடிக்கைகள் ஐ.நா.என்ற பாரிய அமைப்பை அவமதிப்பதாக உள்ளது.

மிகச் சிறிய நாடான இலங்கை, ஐ.நா. சபையை எதிர்ப்பதை நோக்குவது அந்நாட்டின் போக்கு எத்தன்மையதென்பதை உலக நாடுகள் புரிந்து கொள்வதற்குப் போதுமானவையாகும்.

இலங்கையில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பில் ஐ.நா.சபை விசாரணைகளை மேற்கொள்வதில் இத்துணை எதிர்ப்பும் கோபமும் எதற்கானது?

போர்க்குற்றங்கள் இடம்பெறவில்லையாயின் அதனை நிரூபிப்பதற்கான வழிவகைகளை அரசு மேற்கொள்ளவேண்டும்.

இதைவிடுத்து எங்களிடம் எந்த விசாரணையும் நடத்த முடியாது எனக் கூறுவது, குற்றவாளியல்ல என்பதை நிரூபிப்பதற்கான வழியாகாது.

அதேநேரம் ஐ.நா.சபைக்கே இத்தனை எதிர்ப்புகளும் அவமதிப்புகளும் எனில், போரில் அகப்பட்ட தமிழ் மக்களின் நிலை எவ்வாறு இருந்திருக்குமென்பதை ஊகித்துக் கொள்வதற்கு வேறு ஆதாரங்கள் எதுவும் தேவையிராது.

எதுவாயினும் ஐ.நா.சபை தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை அரசு மேற்கொள்ளும் அத்தனை எதிர்ப்பு நடவடிக்கைகளும் ,சிங்கப்பூரின் முன்னாள் பிரதமர் கூறிய 'இலங்கை கண்ணீர் விட்டு வருந்த வேண்டி வரும்' என்ற கருத்தையே ஞாபகப் படுத்துகிறது.

# சிறுவர் இல்லங்களில் 86 சிறுவர்கள்; உறவினர்கள் அழைத்துச் செல்லலாம்

## சிறுவர் பாதுகாப்பு ஆணையாளர் அறிவிப்பு

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப்போரின்போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரசாங்க கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு சென்ற பெற்றோர் மற்றும் உறவினர்கள் இல்லாத 86 பிள்ளைகள் மன்னார் மற்றும் வவுனியா சிறுவர் இல்லங்களில் இருப்பதாக சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் ஆணையாளர் சரத் அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்த பிள்ளைகளின் பெற்றோர் அல்லது உறவினர்கள் இருப்பார்களாயின் அவர்கள் தமது அடையாளங்களை உறுதிப்படுத்தி பிள்ளைகளை அழைத்துச் செல்லாம் எனவும் அவர் கூறியுள்ளார்.

பிள்ளைகள் தொடர்பான தகவல்களை மன்னார் மற்றும் வவுனியாவிலுள்ள சிறுவர் பாதுகாப்பு பணியகங்களில் பெற்றுக்கொள்ள முடியும். 86 பிள்ளைகளில் 18 வயதுக்கும் குறைந்த ஆண், பெண் பிள்ளைகள் இருப்பதாகவும் அபேகுணவர்த்தன மேலும் கூறியுள்ளார். (ச-5)

## பெண் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டிப் பிரதேச பொதுசுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள வளர்ப்புப் பெண் நாய்களுக்கான இலவச கருத்தடை சிகிச்சை எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

12 ஆம் திகதி அளவெட்டி தெற்கு கலைநகர் கலைவாணி சனசமூக நிலையத்திலும் 13 ஆம் திகதி அளவெட்டி மேற்கு முற்போக்கு சனசமூக நிலையத்திலும் நடைபெறும்.வளர்ப்பு பெண் நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை செய்யவிரும்புவோர் பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு பதிவினையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### திருநீறு உணர்த்தும் உண்மை

உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் அழியக் கூடியவையே. அப்பொருள்கள் எல்லாம் தீயினால் அழிந்தால் பிடி சாம்பலாகும் நம் உடம்பும் ஒரு நாள் அழியக் கூடியது.நம் உடம்பும் அழிந்தால் சாம்பலாகும். அல்லது மண்ணோடு மண்ணாகும். இதனை திருநீறாகிய சாம்பல் நமக்கு நினைவூட்டுகின்றது.

எப்போதெல்லாம் திருநீறை கையில் எடுக்கின்றோமோ, அப்போதெல்லாம் நல்லுணர்வு உடையோருக்கு நாமும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவோம் என்னும் உணர்வையும் ஞானத்தையும் திருநீறு உணர்த்துகின்றது. நிலையாமை உணர்வை ஊட்டுகின்றது. நிலையாமையை உணர்த்தலாகிய ஞானம்பெற்றோர் ஏராளமான கவலைகளிலிருந்தும், பற்றுக்களிலிருந்தும் விடுபட்டு, நல்ல அறக்காரியங்களையே செய்வார்கள். இவ்வாறு மெய்ஞான உணர்வினை உணர்த்துவது நெற்றியில் பூசிக்கொள்ளும் சாம்பலாகிய திருநீறு.

## காப்புறுதிப் பத்திரம் கண்டெடுப்பு

தாவடி தெற்கைச் சேர்ந்த என்.கோணேஸ்வரன் என்பவரின் மோட்டார் சைக்கிள் காப்புறுதி மற்றும் வரி அனுமதிப் பத்திரம் என்பன கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.உரியவர் ஆதாரம்காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும். (ச)

## தீவக கல்விவலய திறந்த பாடசாலை பிராந்திய நிலையத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலய திறந்த பாடசாலை பிராந்திய நிலையத் திறப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேலணை அம்பிகை நகர் பொதுமண்டபத்தில் சிரேஷ்ட போதனாசிரியர் க.கதிரேசப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதாகிருஸ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பிராந்திய நிலையத்தை திறந்துவைப்பார். (ச)

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 67 ஆவது ஆண்டு விழா கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 67 ஆவது ஆண்டு விழா கூட்டம் நாளை சனிக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பிரதம தபாற்கந்தோருக்கு அருகாமையில் அமைந்துள்ள யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்க மண்டபத்தின் கட்சியின் தலைவர் தோழர் ராஜா கொல்லூரே தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கட்சியின் பொதுச் செயலாளரும் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீர மைப்பு அமைச்சருமான டி.யூ.குணசேகர, யாழ். மாவட்ட செயலாளர் தோழர் ரி.குகதாஸ் ஆகியோர் சொற்பொழிவாற்றவுள்ளனர். (6-4)

# வெள்ளி நற்சிந்தனை 130

## பக்தியின் மொழி தமிழ்

நாம் இந்த உலகத்தில் ஏன் பிறந்தோம் என வருந்துகின்றவேளைகளும் உண்டு. அவ்வாறு மனம் சோரும்போது அந்த மனத்தை ஆறுதல்படுத்த வேண்டியுள்ளது.

இறை வழிபாட்டிலே ஈடுபட்டுத் தமது வாழ்வில் அமைதி பெற்ற இறையடியார்கள் பலர். அவர்களில் மணிவாசகரது வாழ்க்கையனுபவம் எல்லோருக்கும் மன அமைதியைத் தர வல்லது. ஏனெனில் அவர் வாழ்க்கையை நன்கு அநுபவித்தவர். மந்திரியாக செல்வச் சிறப்போடு வாழ்ந்தவர். பின்னர் இறையருளை உணர்ந்தவர். அவ்வாறு உணர்ந்தபோது தன் மனநிலையைப் பலவாறு பாடல்களில் பதிவு செய்துள்ளார். தன்னுடைய வாழ்க்கையில் செய்யத் தவறியவற்றைப் பற்றி மீள எண்ணிப் பார்க்கிறார்.

கடந்த கால வாழ்க்கையை நோக்கும்போது இறைவனைப் பற்றிய சிந்தனை அற்றிருந்ததை எடுத்துரைக்கின்றார். நான் ஒருபோதும் தவசிகளைப் போலத்தவம் செய்ததில்லை. குளிர்மையான மலர்களைக் கொணர்ந்து இறைவன் திருவடிகளிலே சார்த்தி வணங்கவும் இல்லை. வீணாகப் பிறந்து இதுவரை வளர்ந்துள்ளேன். கொடிய செயற்பாடுகளே செய்து வந்துள்ளேன். அதனால் இறையடியான் என்ற அன்புநிலையை எய்தும் பேற்றை அடையவில்லை. எனவே நீயே என்னை அன்புடன் உன்திருவடிகளில் ஏற்றுக் கொள்ளவேண்டும். 'என்னை உன்னுடைய அடியவனாக ஏற்றுக் கொள்வாய்'என மணிவாசகர் கேட்பது மனித குலத்தவர் அனைவருக்குமே ஏற்றவேண்டுகோளாக அமைந்துள்ளது.

மனதை அமைதிப்படுத்த மணிவாசகர் கூறும் வழி மிகவும் எளிமையானது. குளிர்மையான மலர்களை இறைவனுடைய திருவடிகளில் சேர்க்கின்ற ஒரு நடைமுறைதான் அது. இறையுருவத்திற்கு நாம் செலுத்துகின்ற எளிமையான காணிக்கை. குழம்பியிருக்கும் மனதை நெறிப்படுத்த வேண்டுமாயின் அதற்கு ஏதாவது பயிற்சி அளிக்கவேண்டும். அந்தப் பயிற்சியை வழங்குவதற்கு மலர்களை நாளும் தேடுவதும் அதைச் சேகரிப்பதும் நன்று. அதிலும் குளிர்மையான மலர்களைத் தேடுவதாயின் அதிகாலை எழுந்திருக்கவேண்டும். பனியின் சிலிப்போடு அலர்ந்து குளிர்மையாக இருக்கும் மலர்களைக் கொய்ய வேண்டும். அந்த மலர்கள் இறைவனுக்காகச் சேகரிக்கப்படுகின்றன என்ற உணர்வு நமது மனத்தில் உறைந்துள்ள சுயநலத்தை ஒழித்துவிடும். மேலும் நாளாந்தம் இப்பணியைச் செய்யும் போது அதில் ஒரு ஆர்வம் உண்டாகிறது. அந்த ஆர்வம் உள்ளத்திலே புதியதொரு புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இப்பணி தவம் செய்வதைக் காட்டிலும் சிறந்தது. நாளாந்தக் கடமைகளோடு மனத்தையும் ஒரு நிலைப்படுத்தும் இப் பயிற்சி இறைவன் பற்றிய நினைப்பையும் தருகிறது.

உலக வாழ்க்கையில் தேவையற்ற செயற்பாடுகளைச் செய்து மன உழற்சி அடைவதைவிட இறை உணர்வோடு வாழ்வதற்காக ஒரு பயிற்சியைச் செய்வதே நல்லது. மணிவாசகர் தான் விட்ட பிழையைப் பிறரும் விடாதிருக்கப் பாடலிலே வழிகாட்டியுள்ளார்.

"தவமே புரிந்திலன் தண்மலர் இட்டு முட்டாதிறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினையேன் உனக்கன்பருள்ளாம்
சிவமே பெறும் திருவெய்திற்றிலேன் நின்திருவடிக்காம்
பவமே யருளு கண்டாய் அடியேற் கெம்பரம்பரனே".

# இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்காக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குரல் கொடுக்கும்

## டி.ராஜா எம்.பி.தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் டி.ராஜாவை இலங்கைதமிழ்எம்பிக்கள் டில்லியில் நேற்று முன்தினம் சந்தித்து பேசினார்.

இலங்கை தமிழ் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த எம்.பி.க்கள் இந்தியா சென்றுள்ளனர். இந்த குழுவில் சம்பந்தன், சுரேஷ் பிரேமசந்திரன் , சேனாதி ராஜா உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர். டில்லியில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் சென்ற தமிழ் எம்.பி.க்கள் அங்கு கட்சியின் மூத்த தலைவரான டி.ராஜா எம்.பி. யை. சந்தித் தனர்.

அப்போது இலங்கை தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இந்தியா தீவிரமாக முயற்சிப்பதன் அவசியத்தை தமிழ் எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

அதற்கு டி.ராஜா கூறுகையில்,

இலங்கை இராணுவத்தால் தமிழர்கள் கொல்லப்பட்டது குறித்த விசாரணை நடத்த இந்தியா வற்புறுத்தாதது ஏன் என்பது புரியவில்லை. தமிழர் பகுதியில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படுவது கவலை அளிக்கிறது. இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளுக்காக நாடாளுமன்றத்திலும் வெளியேயும் இந்திய கம்யூனிஸ்ட் குரல் கொடுக்கும். குறிப்பாக முகாம்களில் வசிப்பவர்களை குடியமர்த்தவும் நிவாரண பணிகளை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்ய இந்திய அரசை வற்புறுத்துவோம் என்று கூறினார். (6)

# மெக்சிகோவில் விமான விபத்து; அமைச்சர் உட்பட எட்டு பேர் பலி

(மான்டெரி)


மெக்சிக்கோ நாட்டில் பொதுப்பணித் துறை அமைச்சரான ஹரோசியா பாஸ்கி அங்குள்ள நேகராஸ் நகருக்கு குட்டி விமானத்தில் சென்றார். அவருடன் நகர மேயர் ஜோஸ்மா செபேஸ் மற்றும் அதிகாரிகள் சென்றனர். மொத்தம் 8 பேர் விமானத்தில் இருந்தனர். அப்போது விமானம் கட்டுப்பாட்டை இழந்து கீழே விழுந்து நொறுங்கியது.

இதில் பயணம் செய்த 8 பேரும் பலியானார்கள். அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன.

விமான விபத்துக்கு இயந்திர கோளாறு தான் காரணம் என்று கருதப்படுகிறது. இது பற்றி விசாரணை நடத்த உத்திரவிடப்பட்டுள்ளது.

மேலும் விமானம் விழுந்த பகுதியில் சமீபத்தில் புயல் தாக்கி இருந்தது. விபத்து நடந்த போது வானிலையும் மோசமாக இருந்தது. எனவே வானிலை காரணமாக விபத்து நடந்து இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. (6-4)



சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியை (இடது) அந்நாட்டு அதிபர் ஹு ஜின்டாவோ தலைநகர் பீஜிங்கில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

# பின்லாந்தில் இணையத்தள பயன்பாடு அடிப்படை உரிமையாக அறிவிப்பு

உலகிலேயே முதன் முறையாக பின்லாந்து நாட்டில் இணையத்தள பயன்பாடு அடிப்படை உரிமையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அந்நாட்டு தகவல் தொடர்புத்துறை அமைச்சர் சுவி லிண்டன் கூறியதாவது,

இணையத்தள பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இது வணிகம் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்கு ஆற்றுகிறது. எனவே இணையத்தள பயன்பாட்டை அடிப்படை உரிமையாக அறிவித்துள்ளோம்.

உலகிலேயே முதன்முறையாக அடிப்படை உரிமையாக அறிவித்தது எங்கள் நாடு தான். குறைந்த செலவில் தரமான அகண்ட அலைவரிசை இணைப்புக்களை எங்கள் அரசு வழங்குகிறது. வீடுகள் மற்றும் அலுவலகங்களில் 99 சதவீதத்தினர் இணையத்தள இணைப்பை பெற்றுள்ளனர்.

50 இலட்சம் பேர் அகண்ட அலைவரிசை இணைப்பை பெற்றுள்ளனர். குறைந்த செலவில் ஒரு வினாடிக்கு ஒரு மெகா பைட் என்ற விகிதத்தில் இந்த செலவில் ஒரு வினாடிக்கு ஒரு மெகா பைட் என்ற விகிதத்தில் இந்த இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சுவிலிண்டன் கூறினார். (6-4)

# தீவிரவாதிகள் என நினைத்து இராணுவம் மீது தாக்குதல்

## ஐவர் பலி; ஏழு பேர் காயம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான் மற்றும் அல்கொய்தா தீவிரவாதிகளை கட்டுப்படுத்துவதற்காக அமெரிக்கா தலைமையில் பன்னாட்டு படைகள் முகாமிட்டு உள்ளன.

அவர்கள் கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள காஸ்னி பகுதியில் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது அதே பகுதியில் ஆப்கானிஸ்தான் இராணுவ வீரர்களும் தீவிரவாதிகளை தேடும் வேட்டையில் ஈடுபட்டு இருந்தனர்.

அவர்களை பன்னாட்டு படையினர் தீவிரவாதிகள் என நினைத்து அவர்கள் மீது விமானத்தில் சென்று குண்டு வீசி தாக்குதல் நடத்தினார்கள்.

இதில் ஆப்கானிஸ்தான் இராணுவ வீரர்கள் 5 பேர் பலியானார்கள். 7 பேர் காயம் அடைந்தனர். பன்னாட்டு படைகள் இதேபோல் ஏற்கனவே பலமுறை தவறுதலாக தாக்குதல் நடத்தி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்கதலுக்கு ஆப்கானிஸ்தான் பாதுகாப்புதுறை கண்டனம் தெரிவித்து உள்ளது. ஆப்கானிஸ்தான் -பன்னாட்டு படை கூட்டு விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது. (6-4)

# மலேசியாவில் மாபெரும் பேரணி நடத்துவதற்கு தீர்மானம்

இலங்கை முகாம்களில் இருந்து தப்பித்து மலேசிய இருட்டறை முகாம்களில் தவித்த 75 ஈழத்தமிழர்களை அகதிகளாக ஐ.நா ஏற்றுக்கொண்டது.

இதேவேளை ஐ.நா. அகதிகளாக ஏற்றுக் கொண்ட பிறகும் மலேசிய அரசாங்கம் அவர்களை விடுதலை செய்யாமல் இருட்டறையிலேயே அடைத்து வைத்துள்ளது.

இவர்கள் இன்னும் ஒரு வாரத்திற்குள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு அகதிகளுக்கான உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்பதுடன் இவையெல்லாம் மறுக்கப்படும் பட்சத்தில் மலேசிய பாராளுமன்றம் நோக்கி தமிழர்களை ஒன்றிணைத்து மலேசியாவில் மாபெரும் பேரணி நடத்துவோம் என்றும் மாற்று செயலணி அமைப்பு அறிவித்துள்ளது.

(6-4)

# ஈராக்கில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலில் 40 இற்கும் மேற்பட்டோர் பலி; பலர் காயம்

ஈராக்கில் வடக்கு பக்தாத்தில் அமைந்துள்ள சியா முஸ்லிம்களின் மத வழிபாட்டுத் தலமொன்றில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் நாற்பதுக்கும் மேற்பட்ட வர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 100 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெரும் எண்ணிக்கையிலான யாத்திரிகர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த மத வழிபாட்டு தலத்தின் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்ற அச்சத்தினால் 2 இலட்சம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் மிகக் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறெனினும் தற்கொலை குண்டுதாரிகள் பாதுகாப்புக்களை மீறி இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷியா மற்றும் சுனி முஸ்லிம்களுக்கு இடையில் நிலவி வரும் முறுகல் நிலையினால் அடிக்கடி இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சதாம் உசேனின் ஆட்சி காலத்தில் குறித்த யாத்திரைத் தலத்திற்கான பயணங்கள் வரையறுக்கப்பட்டிருந்ததாகவும் இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரையில் எவரும் உரிமை கோரவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது. (6-4)

# இலஞ்சம் வாங்கிய அதிகாரிக்கு சீனாவில் தூக்குத் தண்டனை

(பீஜிங்)

சீனாவில் உள்ள சாங்கிங் நகர சபை நீதிமன்றத்தின் முன்னாள் இயக்குநர் வென் கியாங் (55) ஆவார். ஊழல் புகாரில் சிக்கிய இவர் மீது நகர சபை நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது.

சட்டவிரோதமாக இலாபம் சம்பாதிப்பதற்கு உதவியதற்காக தனியார் நிறுவனங்களிடம் ரு8.4 கோடியை இலஞ்சமாக வாங்கியது விசாரணையில் உறுதி செய்யப்பட்டது.

மேலும் இவர் மீதான பாலியல் பலாத்கார புகாரும் நிரூபனமானதால் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தார் என்றும் அதை கடந்த ஏப்ரல் 14 ஆம் திகதி தள்ளுபடி செய்தது. இதையடுத்து வென் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட்டார். (6-4)




வீட்டுக்காவலில் உள்ள மியான்மர் நாட்டின் முக்கிய எதிர்க்கட்சித் தலைவரும் நோபல் பரிசு பெற்றவருமான ஆங்சாங்சூகியை விடுவிக்கக் கோரி தென்கொரிய தலைவர் சியோலில் உள்ள தூதரகம் முன் அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

# ஜேர்மனியின் சம்பியன் கனவு தகர்ந்தது இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஸ்பெயின்



(டர்பென்)

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் இறுதிப்போட்டிக்கு முதல் முறையாக முன்னேறி வரலாறு படைத்தது ஸ்பெயின் அணி. நேற்று முன்தினம் நடந்த அரையிறுதிப் போட்டியில் ஜேர்மனியை 1-0 என்ற கோல் கணக்கில் சுப்பராக வீழ்த்தியது. சொதப்பலாக ஆடிய ஜேர்மனி அணியின் சம்பியன் கனவு தகர்ந்தது.

தென்னாபிரிக்காவில் 19ஆவது உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடர் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது அரையிறுதியில் கால்பந்து தரைவரிசைப் பட்டியலில் 2ஆவது இடத்திலுள்ள ஸ்பெயின் அணி ஜேர்மனியை எதிர் கொண்டது.

விறுவிறுப்பாக நடந்த இப் போட்டியின் ஆரம்ப முதலே ஸ்பெயின் ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் ஸ்பெயின் வீரர் பெட்ரோவிடம் பந்தை பெற்றுக் கொண்ட நட்சத்திர வீரர் டேவிட் வில்லா கோல் அடிக்க முயன்றார்.

ஆனால் ஜேர்மனி கோல்காப்பாளர் நியூர் சாமர்த்தியமாக தடுத்தார். ஸ்பெயின் அணி (13ஆவது நிமிடம்) ஜேர்மனி (15 மற்றும் 16ஆவது நிமிடம்) அணிகள் அடுத்தடுத்து கோணர் கிக் வாய்ப்புக்களை வீணடித்தனர்.

**பொடோல்ஸ்கி காயம்**

ஆட்டத்தின் 27ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் நட்சத்திரவீரர் பொடோல்ஸ்கியின் காலை வேண்டுமொன்று பலமாக தாக்கி னார் ஸ்பெயினின் ரோமஸ். இதனால் பொடோல்ஸ்கி காயமடைந்தார். இதனை நடுவர் கவனிக்காததால் ரோமாஸ் தப்பித்தார்.

44ஆவது நிமிடத்தில் கிடைத்த பிரி கிக் வாய்ப்பை ஸ்பெயின் வீரர் புயோல் வீணடித்தார். முதல்பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை.

**புயோல் அசத்தல்**

இரண்டாவது பாதியில் ஸ்பெயின் ஆக்கிரோசமாக ஆடியது. ஆட்டத்தின் 58ஆவது நிமிடத்தில் இரண்டுமுறை ஸ்பெயினுக்கு கோல் அடிக்கும் வாய்ப்பு கிட்டியது. ஆனால் பெப்ரோ, டேவிட் வில்லா ஆகியோர் நூலிழையில் தவறவிட்டனர்.

ஆட்டத்தின் 73ஆவது நிமிடத்தில் ஸ்பெயினுக்கு அடித்தது அதிர்ஷ்டம். கோணர் கிக் வாய்ப்பில் ஷேவி அடித்த பந்தை தலையால் முட்டி சுப்பர் கோல் அடித்தார் கார்லஸ் புயோல். இப் போட்டியில் பெரும் ஏமாற்றமளித்த ஸ்பெயின் வீரர் டேவிட் வில்லா 81ஆவது நிமிடத்தில் வெளியேறினார். இவருக்குப் பதில் டோரஸ் களமிறங்கினார்.

**ஜேர்மனி ஏமாற்றம்**

ஸ்பெயினுக்கு பதிலடி கொடுக்க ஜேர்மனி போராடியது இருப்பினும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. இத் தொடரில் காலிறுதிப் போட்டியில் மஞ்சல் அட்டை பெற்ற தோமஸ் முல்லர் இடம் பெறாதது ஜேர்மனிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

இதனால் அணியின் மத்தியகள வீரர்களின் செயல்பாடு படு மந்தமாக உள்ளது. குளோஸ், பொடோல்கிஸ்கி இருவரும் சாதிக்கத் தவறினர். இறுதியில் ஜேர்மனி இறுதிப் போட்டி வாய்ப்பை கோட்டைவிட்டது.

துடிப்புடன் ஆடிய யூரோ சம்பியன் ஸ்பெயின் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முதல் முறையாக உலகக் கிண்ணக் கால்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

**ஒக்டோபஸ் வெற்றி**

ஜேர்மனியில் ஓபர்ஹாசினில் கடல்வாழ் உயிரினங்களின் காண்காட்சியகம் உள்ளது. இங்குள்ள ஒக்டோபஸ் தென்னாபிரிக்காவில் நடக்கும் உலகக்கிண்ண கால்பந்து தொடரில் ஜேர்மனியின் வெற்றி தோல்விகளை சரியாக கணித்து வந்தது. அரையிறுதியில் ஸ்பெயினிடம் ஜேர்மனி தோல்வியடையும் என சுட்டிக்காட்டியது.

இதன்படியே ஸ்பெயின் வெற்றிபெற்றது. இதன்மூலம் ஒப்டோபஸின் கணிப்பு 100 சதவீதம் உண்மையாகியுள்ளது.

ஜேர்மனி தோல்வி அடையும் என கணித்த ஒப்டோபஸின் மீது அந் நாட்டு ரசிகர்கள் கடும் கோபத்தில் உள்ளனர். ஜேர்மனி தோல்வியடைந்தால் அதனை சமைத்து சாப்பிட்டு விடுவதாக ரசிகர்கள் தெரிவித்திருந்தனர். ஜேர்மனி ரசிகர்களின் கைகளுக்கு ஒக்டோபஸ் தப்புமா?

**நெதர்லாந்துடன் மோதல்**

அரையிறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற ஸ்பெயின் அணி இறுதிப் போட்டியில் நெதர்லாந்தை எதிர்கொள்கிறது. இறுதிப்போட்டி நாளை மறுதினம் சாக்கர்சிட்டி மைதானத்தில் நடக்கவுள்ளது.

## தங்கக்காலணி யாருக்கு?

உலகக்கிண்ண கால்பந்தாட்ட தொடரில் அரையிறுதி ஆட்டங்கள் வரை அதிக கோல் அடித்த வீரர்களில் ஸ்பெயின் வீரர் டேவிட் வில்லாவும் நெதர்லாந்து வீரர் வெஸ்லி ஸ்னைடரும் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். இவர்கள் இருவரும் தலா 5 கோல்கள் அடித்துள்ளனர்.

இருவருக்கும் இறுதிப் போட்டி மட்டுமே உள்ளது. இறுதிப் போட்டியில் கோல் அடிப்பவருக்கு தங்கக்காலணி கிடைக்கவாய்ப்புள்ளது. அதே வேளையில் ஜேர்மனியின் மிராஸ்லாவ் குளோவும், தோமஸ் முல்லரும் தலா 4 கோல்கள் அடித்துள்ளனர்.

உருகுவே அணிக்கு எதிரான 3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் இவர்களில் யாராவது அதிக கோல் அடித்தால் தங்கக்காலணி கால் மாறிட கூடும். உருகுவே அணித்தலைவர் டீகோ போர் லானும் 4 கோல்கள் அடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

***அதிக கோல் அடித்த முதல் பத்து வீரர்கள்***

டேவிட் வில்லா - ஸ்பெயின் : 5 கோல், வெஸ்லிஸ்னைடர் - நெதர்லாந்து : 5 கோல்கள், ஹீகுவான் - ஆர்ஜென்டீனா : 4 கோல்கள், மிராஸ்லாவ குளோஸ் - ஜேர்மனி : 4 கோல்கள், தோமஸ் முல்லர் - ஜேர்மனி : 4 கோல்கள், ராபர்ட் விர்டேக் - சுலோவோக்கியா 4 கோல்கள், டீகோ போர்லான் - உருகுவே : 4 கோல்கள், டோனாவன் - அமெரிக்கா : 3 கோல்கள், பேபியானோ - பிரேசில் : 3 கோல்கள் சாரஸ் - உருகுவே : 3 கோல்கள்.

## சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 800 விக்கெட்டுக்கள் வீழ்த்துவேன்

## முரளிதரன் நம்பிக்கை

(காலி)

சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஓய்வு பெறுவதற்கு முன்னர் நடைபெறவுள்ள இந்தியாவுடனான போட்டியில் தனது 800ஆவது டெஸ்ட் விக்கெட்டை கைப்பற்ற முடியும் என நம்புவதாக தெரிவித்துள்ளார்.

இந்திய அணியுடன் நடைபெறவுள்ள காலி டெஸ்ட் போட்டியுடன் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்த பின்னரே முத்தையா முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலிய நடுவர் டெரல் ஹெயருடனான முரண்பாடுகளை தீர்த்துக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபடும் எந்தவொரு நோக்கமும் இல்லை அத்துடன் ஊடகங்கள் கிரிக்கெட் வீரர்களை பிழையான வழியில் ஈடுபடுவதற்கு தூண்டக்கூடாது டெஸ்ட் கிரிக்கெட்டில் 800 விக்கெட்டுக்களை அசத்துவேன் என நம்புகிறேன்.

காலியில் இடம்பெறவுள்ள இந்தியாவுடனான போட்டியில் முரளிதரன் ஓ ய்வு பெற வுள்ளார். முத்தையா முரளிதரன் டெஸ்ட் போட்டிகளில் 792 டெஸ்ட் விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாகாணமட்ட மெய்வல்லுநர் போட்டி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு 4 தங்கம், 2 வெள்ளிப் பதக்கங்கள்



இ.செந்தூரன் | வ.ஜஸ்மினன் | க.பிரகாஸ் | இ.சஜீந்திரா | கு.சிவேந்திரன்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள் 4 தங்கத்தையும், 2 வெள்ளிப்பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

15 வயதுப்பிரிவில் உயரம் பாய்தலில் இ.செந்தூரன், 17 வயதுப் பிரிவில் வ.ஜஸ்மினன், நீளம்பாய்தல், முப்பாய்ச்சல் ஆகியவற்றில் 21 வயதுப்பிரிவில் க.பிரகாஸ், குண்டு போடுதலிலும் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதேவேளை 13 வயதுப் பிரிவில் இ.சஜீந்திரா 100 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் கு.சிவேந்திரன் 19 வயதுப்பிரிவில் 200 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்று வெள்ளிப்பதக்கங்களினை பெற்றுக்கொண்டனர்

வெற்றிபெற்ற மாணவர்கள் எதிர்வரும் மாதங்களில் நடைபெறவுள்ள தேசியமட்டப் போட்டிகளில் பங்குபெற உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான அதிபர், விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர் மேற் பார்வையில் செ.ரமணனும் பயிற்சியினையும் பயிற்சி நெறிப்படுத்தலினையும் ஆசிரியர் க.சுவாமிநாதன் ஆகியோர் வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

# தமிழரின் அறவழிப் போராட்ட...

கொழும்பு ஐ.நா. வளாகத்துக்கு முன் னாள் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ ஆரம்பித்துள்ள சாகும் வரை உண்ணாவிரதம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

தமிழ் மக்களின் தேசிய அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன.

யுத்தத்திற்கு முந்தைய கால கட்டத்திலும் யுத்தத்தின் போதும் தமிழ்மக்களின் உயிர்வாழும் உரிமைகள் பறிக்கப்பட்டன.

ஆயுதப் பேராட்டத்துக்கு முன்னர் இடைக் கிடையே நடைபெற்ற சாத்வீக போறாட்டங்களை தற்போது தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்பதையே அமைச்சர் விமல் வீரவன்ஸவின் உண்ணாவிரதப் போராட்டம் எடுத்துக் கூறுவதாக கருதுகின்றேன்.

தற்போது யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதற்கான காரணங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வில்லை. அரசாங்கம் தொடர்ச்சியாக அரசியல் தீர்வை ஒத்திவைத்துக்கொண்டேவரு கின்றது.

இச்சந்தர்ப்பத்தில் உண்மையில் தமிழ் அரசியல் கட்சித்தலைவர்கள்தான் உண்ணாவிரதம் உட்பட அனைத்து சாத்வீக போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும் இதன் மூலம் உலகிற்கும் அரசாங்கத்திற்கும் தமிழர்களின் போராட்ட நியாயங்களை எடுத்துக் கூறவேண்டும்.

இது நடைபெற்றிருக்குமானால் அதில் நியாயம் இருந்திருக்கும் ஆனால் அதற்குப் பதிலாக ஆளுகின்ற அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சரும் ஆளும் கூட்டணியின் பங்காளிக்கட்சித் தலைவருமான விமல் வீர வன்ச அனைத்து உலக நாடுகளின் அமைப்பான ஐ.நா. சபையின் கொழும்பு வளாகத்துக்கு முன்னாள் சாகும்வரை உண்ணா விரதத்தை ஆரம்பித்துள்ளார்.

வீரவன்ஸவின் உண்ணாவிரதத்தின் நோக்கத்தை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் தனது நோக்கத்துக்காக அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளார் என்பது அப்பட்டமாகத் தெரிகின்றது.

இது தமிழ் மக்களின் கவனத்தை ஈர்த்திட வேண்டும் எங்களது உரிமைகளை ஐ.நா. சபையும் சர்வதேச சமூகமும் கொண்டுவந்து தரும் என காத்திருக்காமல் 30 ஆண்டுகால ஆயுதப்போராட்டத்தின் முன் நிலவிய அறவழிப்போராட்ட கால கட்டத்திற்கு தமிழ் மக்கள் திரும்பி செல்ல வேண்டும் என்றார். (ச-5)

# ஜனாதிபதியின் கதைவசனத்...

தாகவும் அனுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டம் ஆரம்பத்திலிருந்தே அரசாங்கத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டது எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடிக்கச் சென்ற பொலிஸார் தடிகளைக் கூட கொண்டுசெல்லவில்லை.

கண்ணீர் புகை பிரயோகங்களை மேற்கொள்ளும் துப்பாக்கிகளையோ தண்ணீரை தாரை தாக்குதல் நடத்தும் தாங்கிகளையோ காண முடியவில்லை.

பொலிஸ் அதிகாரிகள்மீது தாக்குதல் நடத்தும் காட்சிகளை காண முடிந்தது.

எதிர்க் கட்சிகள் ஜனநாயக ரீதியான ஆர்ப்பாட்டங்களை நடத்தும் போது அரசாங்கம் மாத்திர மல்ல பொலிஸாரும் இவ்வாறு செயற்படுவதில்லை.

ஜெனரல் சரத்பொன்சேகாவை விடுதலை செய்யக்கோரியும் அவருக்குரிய சிகிச்சைகள் வழங்குமாறு வலியுறுத்தியும் கொழும்புக் கோட்டை புகையிரத நிலையத்திற்கு எதிரில் ஜனநாயக தேசியக் கூட்டணியால் ஆரம்பிக்கப்பட்ட அமைதியான எதிர்ப்பை முறியடிக்க பொலிஸார் மேற்கொண்டு நடவடிக்கை குறித்தும் அனுரகுமார நினைவூட்டினார்.

எதிர்க்கட்சிகளினால் நடத்தப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட பௌத்த பிக்குகள் நீதிமன்ற உத்தரவின் பேரில் மிகவும் கேவலமான முறையில் அங்கிருந்து அகற்றப்பட்டதுடன் அவர்களுக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது எனவும் அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக் காட்டினார். (ச-5)

# இந்தியத் தலைவர்...

காணப்படவேண்டும் என்று வலியுறுத்திக் கூறினோம்.

அவ்வாறு காணப்படும் தீர்வு தமிழ் மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யக் கூடிய, ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாக அமைய வேண்டும் என்று கூறினோம்.

எமது இந்தக் கோரிக்கையை அவர்கள் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டதுடன் இது தொடர்பாக இலங்கை அரசாங்கத்துடன் பேசி ஒரு நிலையான தீர்வினை பெற்றுத் தருவதாக கூறினார்கள்.

நீண்டகாலமாக இழுபறியிலுள்ள தமிழர் பிரச்சினை நீடித்துக்கொண்டு செல்லாமல் குறிப்பிட்ட காலவரையறைக்குள் தீர்க்கப்பட வேண்டும் என வலியுறுத்தினோம். ஏன் எனில் தமிழ் மக்கள் தொடர்ந்து அவலப்பட்டு அகதிகளாக வாழ முடியாது என்றார்.

இந்தியத் தலைவர்களுடன் நாம் பேசிய அனைத்து விடயங்களும் திருப்தி அளித்தது என சம்பந்தன் குறிப்பிட்டார். (ச-9)


## பதவி வெற்றிடம்

- ஓவ்செற் இயந்திர இயக்குநர் (ஆண்கள்)
- ஓவ்செற் இயந்திர பயிலுநர்கள் (ஆண்கள்)
- பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள், இரவுக் கடமை)

யாழ்.நகரில் இருந்து 6 KM தூரத்திற்குள் வதியும் தகைமையுடையவர்கள் நேரில் வரவும்.

இல.3,இரண்டாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி ,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி


## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம்

அளவெட்டி கணேஷ்வரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம் 08.07.2010 நேற்று காலமாகிவிட்டார்.அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் சரவணபவன், சக்திவேல்பவன்,கணேஷ், சக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும்,ரவிசுதா,இந்திராணி,சங்கரன் ஆகியோரின் அன்பு மாமியும் சாரங்கன், சாரங்கி, பிருந்தா,சஜீபவன், சாயினி, தஜீகரன், சயந்தி ,லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று மல்லாகம் இந்து மயானத்தில் இன்று (09.07.2010)பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும்.

கணேஷ்வரம்
அளவெட்டி
0771416312 (C-617)

தகவல்:-
சு.சக்திவேல்பவன்
(சுக்கன்)

# விண்ணப்பங் கோரல்கள்

## தேசிய கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விக்கு விண்ணப்பம்

தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்றில் கல்வியில் மூன்றாண்டு கால சேவை முன் தொழிற்பயிற்சி ஒன்றைப் பயில் வதற்குத் தேவை யான கல்வித் தகைமைகளையும் தகுதிகளை யுமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி 2009ஆம் ஆண்டு நடந்த க.பொ.த (உ/த) பரீட்சையில் மூன்று பாடங் களில் சித்தியடைந்திருக்க வேண் டும்.

விண்ணப்பத்தை 2010-07-30 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிரதம ஆணையாளர், (ஆசிரிய கல்வி), கல்வியற்கல்லூரி கிளை, கல்வி அமைச்சு இசுறுபாய, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

## நிர்வாக சேவையில் வகுப்பு IIIக்கு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சை

இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III க்குஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை 2009 இற்கு விண்ணப்பங்கோரப்பட்டுள்ளது. இப்பரீட்சை ஒக்டோபர் மாதம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெறும். விண்ணப்பதாரி 2009.12.31 இல் அரச அலுவலர் ஒருவராக இருத்தல் வேண்டும். அத்துடன் தனது சேவையில் ஒரு வருட சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2010 ஓகஸ்ட் 9 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்க கூடியவாறு பதிவுத்தபாலில் திணைக்களத் தலைவரூடாக பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை

இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை 2ஆம் வகுப்பின் II ஆம் தர உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறன் தடைதாண்டற் பரீட்சை ஒக்டோபர் மாதம் கொழும்பில் நடைபெறும் இப் பரீட்சைக்கான விண்ணப்பத்தை 2010 ஆகஸ்ட் 6 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம் பெலவத்தை, பத்தரமுல்லை என்ற விலாசத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ் விண்ணப்பம் கோரல்கள் தொடர்பான மேலதிக தகவல்களை இன்றுமுதல் வலம்புரிக் காரியாலயத்தில் பார்வையிட முடியும் அல்லது இன்று வெளியாகும் வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிட முடியும். (ச-5)

# இலங்கை இறுதி யுத்...

இலங்கையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது. எனினும் பாதிக்கப்பட்வர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் மற்றும் நீண்ட கால நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்தவேண்டுமென அவர்வலியுறுத்தியுள்ளார். (ச-5)

# அமைச்சர்...

அலுவலகத்தின் வெளிப்புறத்தில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் போது ஊடகங்களுக்கு கருத்துரைத்த விமல் வீரவன்ஸதாம் இந்தப் போராட்டத்தின் போது உயிரிழந்தாலும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (ச-5)

# ஐ.நா சபை...

கொழும்பு ஐ.நா. அலுவலகத்தின் வழக்கமான செயற்பாடுகள் மீதான இடையூறுகளை இலங்கை அதிகாரிகள் தடுக்கத்தவறியமை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கி மூன் கூறியதாகவும் மேற்படிப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்கு உதவுவதற்காக ஐ.நா. அமைப்பின் பணிகள் மேலும் இடையூறு இன்றி தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதை உறுதிப் படுத்துவதற்காக ஐ.நா. அலுவலகத்தைக் கொண்டுள்ள நாடு என்ற வகையில் தனது கடப்பாடுகளை நிறைவேற்றும் படியும் இலங்கை அரசாங்கத்திடம் பான் கீ மூன் கோரியுள்ளார்.

அத்துடன் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி நீல் பூனேவையும் திருப்பி அழைத்ததுடன் ஐ.நா அலுவலகத்தை மூடுவதற்கும் பான் கீ மூன் தீர்மானித்துள்ளார். (ச-5)

## மரண அறிவித்தல்

### மூத்தார் சபாபதி



உரும்பிராய் கிழக்கு,உரும்பிராயைச் சேர்ந்த மூத்தார் சபாபதி அவர்கள் 08.07.2010 அன்று காலமாகிவிட்டார்.இவர் காலஞ்சென்ற நவமணிதேவியின் அன்புக் கணவரும் தங்கம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான சண்முகம்,சின்னத்தங்கச்சி,இராசம்மா, சின்னத்துரை ஆகியோரின் சகோதரரும் நாகரட்ணம், இராசையா, சிவசுப்பிரமணியம்,கனகம்மா, அன்னம்மா,காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் தயாபரன், நிர்மலா,இராசபரன், ஞானபரன்,ஸ்ரீபரன்,(லண்டன்),இராதாபரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவன் (ஆசிரியர் -யாழ்.அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), பகவதி,அகிலினி,ஜெயவதனி,ராஜி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (09.07.2010) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P.:0778245558 (1827)

தகவல்:-
பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.